மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 2 | 1 - [illegible] - 54 | இதழ் 19



★

விஞ்ஞானத்தின் கண்

சந்திர கிரகணம், சூரிய கிரகணம் என்றால், மேல் நாடுகளில் பெரும் தொலைநோக்காடிகள் (டெலஸ்கோப்) சுழலும். இங்கோ ஜபமாலைதான் சுழல்கிறது. அங்கு மக்களின் அறிவு வளர்க்கப்படுகிறது, இங்கு மக்களின் மடமை வளர்க்கப்படுகிறது.

★

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

நந்தவனமும் நாயும்

1935-ல் நடைபெற்ற நகரசபைத் தேர்தலில், பெத்து நாய்க்கன் பேட்டையில், அறிஞர் அண்ணாவை எதிர்த்து நின்ற காங்கிரஸ்காரருக்கு ஆதரவாகப் பலப்பல சொற்பொழிவாளர்கள் வந்தார்களாம். அவர்களில் ஒருவர் திரு. வி. கல்யாணசுந்தரனாரும் ஆவாராம்.

தேர்தல் கூட்டமொன்றில் திரு. வி. க. அவர்கள் சொற்பொழிவாற்றும்போது, "நந்தவனத்தில் நாயொன்று செத்துக் கிடந்தால், மக்கள் நாயை அகற்றுவரோ அல்லது நந்தவனத்தை அழிப்பரோ! நந்தவனத்தை அழிக்கார்! ஒருக்காலும் அழிக்கார்!! நாயையே அகற்றுவர்! அதுபோல காங்கிரஸில் தீயவர் சிலர் இருந்தால், தீயவரை அகற்றுவது நன்றா? அல்லது அதற்காக காங்கிரஸையே அழிப்பது நன்றா? கூர்ந்து பார்மின்! தீயவரை அகற்றுவதன்றோ நல்லவரின் கடமை! நந்தவனத்தைத் தூய்மைப் படுத்திக் காப்பாற்றுவதுபோல், காங்கிரஸையும் காக்க வேண்டும் என்பேன்" என்று கூறினாராம்.

அடுத்து நடை பெற்ற கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசும்போது, "திரு வி. கல்யாண சுந்தரனார் பேசும் போது நந்தவனத்தில் நாய் செத்துக்கிடந்தால் நாயை அகற்றுவதா? அல்லது நந்தவனத்தை அழிப்பதா? என்று கேட்கிறார். நல்லவர்கள் சுகம்பெறவும், நலிவடைந்தோர் குணம் பெறவுமே நந்தவனம் அமைந்திருக்கிறது. நல்ல மனிதர்கள் நுழையவேண்டிய நந்தவனத்தில் நாய் நுழையலாமா? நாய் நுழைந்தால் பின் அது நந்தவனமாகுமா? நலிந்தவர்க்கும் நலம் பயக்கவேண்டிய நந்தவனம், நாயைச் சாகடிக்குமா? நாயும் சாகிறதென்றால், நந்தவனத்தில் மணம் வீசவில்லை, விஷக்காற்று வீசுகிறது என்று தானே பொருள்படும். நாயையும் சாகடிக்கும் விஷக்காற்று வீசும் நந்தவனம் ஊரின் நடுவே இருக்கலாமா? அதனை அழித்துப் புதிதாக ஒன்றைத் தோற்றுவிப்பதுதானே நல்லவர் செய்யும் கடமையாக இருக்க முடியும்" என்று பதிலிறுப்பாராம்.

காங்கிரஸ்காரர்கள் வழக்கம்போல் அதற்குச் சமாதானம் கூற முன்வரமுடியாமல், வேறு முறைகளில் திருப்புவார்களாம்.

மன்றம்
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

1 - 2 - 54 திங்கட்கிழமை

இந்தியாவின் குரல்!

அதிகார பீடத்திலிருப்போருக்குத் தாம் தான் ஆளப்பிறந்தவர்கள், மற்றெல்லோரும் அடிமைகளாக அடங்கியொடுங்கிதான் வாழ வேண்டுமென்ற எண்ணம்—உரிமையில் நம்பிக்கை பிறந்துவிட்டால், எதேச்சாதிகார ஆட்சிமுறை வந்துவிடுகிறது. தமக்குப் பிடித்ததையெல்லாம் அதிகாரத்தின் துணைகொண்டு செய்துவிடவேண்டுமென்ற ஆவலும், அவர்களுடைய அடாத செயல்களுக்கு மாறுபட்டவர்கள்—ஒத்துழைப்பைத் தர மறுப்பவர்களை, கடுமையான சித்ரவதைகளுக்கு ஆளாக்கி அழித்தொழித்துவிடத் துடிக்கும் கொடுங்கோன்மையும் உண்டாகின்றன. ஆனால், அவ்வாறு ஏகபோக உரிமைகொண்டாடி, நாட்டுமக்களை ஆட்டிப்படைத்துவரும் அதிகார வெறியினர் நெடுநாளைக்கு ஆட்சிபீடத்தில் வீற்றிருக்க முடிவதில்லை. அவர்களுடைய ஆணவப் போக்கே, அழிவுக்கு அவர்களை அழைத்துச் செல்லும் சரிவுப்பாதையாகிவிடும்.

“நானே தெய்வத்தின் பிரதிநிதி; நாட்டு மக்களையெல்லாம் ஆண்டிடும் சக்தி எனக்குத்தான் தரப்பட்டிருக்கிறது” என்று உரிமை கொண்டாடிய இங்கிலாந்து மன்னன் சார்லஸ், முதலில் ஆணவக்குரலில்தான் சட்டங்களைப் பிறப்பித்தான், சட்டங்களைத் தந்தான், எதிர்த்தவர்களுக்குக் கடுந்தண்டனைகளை யிட்டான். ஆனால் அவனுடைய ஆணவக்குரல் வெகுநாளைக்கு நீடித்துக் கேட்கப்படவில்லை. அவனுடைய தெய்வீக உரிமைகளுக்கு மக்கள் காட்டிய எதிர்ப்பு, ஒரு நாள் அவனது ஆட்சிபீடத்தைத் தாக்கி, ஆட்டங்கொடுக்கத்தான் செய்தது. ஆட்டங்கண்டு, அதுவரை ஆர்ப்பரித்த மன்னன் செய்வதறியாது திகைத்தான், கண்களில் கலக்கம் பிறந்தது, கையிலேயிருந்த செங்கோல்—நாட்டு மக்களின் ரத்தத்தில் ஊறியெடுக்கப்பட்ட சிவந்த கோலாகத்தான் அது இருந்தது—நழுவியது, அவனை மன்னனென்று உலகுக்கு அறிவித்துவந்த மணிமகுடம் மண்ணிலேவிழுந்தது, மன்னனுடைய தலையிலிருந்த மணிமகுடம் மட்டுமல்ல, மன்னனுடைய தலையே மண்ணில் விழுந்தது!

“நானேதான் இந்த அரசாங்கம்!” என்று இறுமாப்புடன் சொன்ன பிரெஞ்சு மன்னன் லூயி பரம்பரையினர், நெடுநாளைக்கு அவ்வாறு கூறிக்கொண்டு இருக்க முடிந்ததா? கிடையாது, கோலாகலமும், கொடுங்கோன்மையும் தந்த அரண்மனை வாழ்விலிருந்து வெளியில் இழுத்தெறியப்பட்டு, கைதிகளாக, அடிமைகளாக, தெருவிலே கூடிநின்ற ஏழைமக்களனைவராலும் இழித்தும், பழித்தும் பேசப்பட்டவர்களாய், அழைத்துச் செல்லப்பட்டனர். ஆட்சிபீடத்திலிருப்பவர்கள் தவறி விழுந்தால், பக்கத்திலிருக்கும் பலிபீடத்தில்தான் சாய நேரிடும் என்பதை அது காட்டிற்று.

இங்கிலாந்து மன்னன் சார்லஸைப்போல், பிரஞ்சு மன்னர்கள் லூயிபரம்பரையினரைப் போல, தெய்வீக உரிமை கொண்டாடி, எதேச்சாதிகார ஆட்சி நடத்தி, கடைசியில் அழிந்து போனவர்கள் வரலாற்றில் மிகப்பலர் இருந்திருக்கின்றனர். ஏன்? ஜெர்மனியையும், ஐரோப்பாவையும் அடிமைப்படுத்தி, உலகையே ஆட்சிபுரியவேண்டுமென்று திட்டமிட்ட ஹிட்லரும், “கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆரிய இனத்தவர்கள், அவர்களில் சிறந்தவர்களாக இருப்பவர்கள் ஜெர்மானியர்கள், அவர்களுக்குப் பிரதிநிதியாக இருப்பவன் நான்தான்!” என உரிமைபாராட்டித்தான், அவன் தனது சர்வாதிகார ஆட்சியைத் தொடங்கினான். கடவுளால்தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்குப் பிரதிநிதியாகயிருந்த அவனுக்கும், அவனுடைய சகாவான முசோலினிக்கும், கடவுளின் முதல் பிரதிநிதியாக விளங்கிடும் போப்பாண்டவர்களின் ஆசீர்வாதம் கிடைத்தது. ஆனால் அவர்கள் கொண்டாடிய உரிமைகள், அவர்களுக்குக் கிடைத்த ஆசீர்வாதங்கள் எதுவும், அதிகாரம் முறிந்து அழிவு வந்து அவர்களை அணைத்துக்கொண்டபொழுது, தடுத்துக் காப்பாற்றவில்லை.

இந்திய துணைக்கண்டத்திலும், ஆளும்

உரிமை பற்றிய ஆணவக்குரல்கள் எழும்பியுள்ளன. இங்கிலாந்து மன்னன் கூறியதும், பிரெஞ்சு மன்னன் பேசியதும், இட்லரும், முசோலினியும் கொண்டாடியதும் இங்கு ஆட்சிமுறையில் அமர்ந்திருப்பவர்களின் உள்ளங்களில் எதிரொலிக்கின்றன. "காங்கிரஸ்காரர்களே ஆள்வதற்கு உரிமையுடையவர்கள்!" "அவர்களுக்கே அந்த யோக்யதாம்சங்கள் இருக்கின்றன." "காங்கிரசேதான் இந்தியா, காங்கிரசேதான் அரசாங்கம்!" என்று ஆளும் உரிமைகள் காங்கிரஸ்காரருக்கு மட்டும்—அதிலும் காங்கிரசுள்ளும் ஆட்சி செலுத்தும் தலைமைபீடத்தினருக்கு மட்டுமிருப்பதாக, பேசுகின்றனர், எழுதுகின்றனர், வெளிப்படையாக அறிவிக்கின்றனர். உரிமைகள் கொண்டாடப்படுவதனால் மட்டும் உண்டாகிவிடுவதில்லை. ஆனாலும், ஏகபோக உரிமையிருப்பதாக ஒருவன் நினைத்துவிட்டால், அதன் விளைவு எதேச்சாதிகார ஆட்சிமுறைக்குத்தான் அழைத்துச் செல்லும். இதன் காரணமாக, இந்திய துணைக்கண்டத்தில் ஆங்காங்காங்கு மாநில ஆட்சிகள் அமைந்தபொழுதும் மத்திய அரசாங்கம் உருவாகியபொழுதும், ஆட்சிபீடத்திலமர்ந்த காங்கிரஸ் தலைவர்கள்—காலமெல்லாம் ஒதுங்கியிருந்துவிட்டு, கடைசி நேரத்தில், விடுதலை கிடைத்து, காங்கிரஸ் பதவியிலமரும் நேரம் வந்ததும் கட்சிக்குள் தலை நீட்டியவர்கள் உள்பட, எல்லோரும் எதேச்சாதிகார ஆட்சியினராக மாறிவிட்டனர்.

கல்யாணி காங்கிரஸில் தலைமைவகித்துப் பேசிய பண்டித நேரு அவர்கள், "காங்கிரசின் குரலே இந்தியாவின் குரல்!" என்று அறிவித்துள்ளார். மந்திரி பதவி குறித்துக் கேள்வி எழும்பியபொழுது காரியக் கமிட்டிக்குச் செல்லமுடிந்தாலும், இப்பொழுது கல்யாணி காங்கிரசில் கலந்துகொள்ள முடியாத நிலையிலிருக்கும் சென்னை முதன்மந்திரி கனம் ஆச்சாரியார் அவர்களும், திருவாங்கூரில் பேசும்பொழுது, "மந்திரிசபையமைக்கும் தகுதி காங்கிரஸ்காரருக்கு மட்டும்தான் இருக்கிறது" என்ற விதத்தில் கூறியுள்ளார். இதேபோல, இந்தியாவின் பிரதிநிதி தாங்களே என்றும், மந்திரிசபைகள் அமைத்து மக்களை ஆண்டிடும் உரிமையும் தகுதியும் தமக்குமட்டுமே இருப்பதாகவும், பாத்தியதையை பல காங்கிரஸ் தலைவர்கள் கொண்டாடுகின்றனர்.

நேரு பண்டிதர் "காங்கிரசின் குரலே இந்தியாவின் குரலாகும்" என்று கூறும்பொழுது, இந்திய துணைக்கண்டம் முழுவதும் ஒரே குடைகீழ், ஒரே ஏகாதிபத்தியத்தின்கீழ், ஒரே மொழியின்கீழ், ஒரே கலாசாரத்தின்கீழ் கொண்டுவரப் பாடுபடும்—தமக்கு இருக்கும் அதிகாரமனைத்தையும் அதற்காகச் செலவிடும் ஆட்சியாளராகவே அவர் பேசியுள்ளார். அவருடைய கூற்றிலே, இந்தியா ஒன்றுபட்டுக் கிடப்பதுபோலவும், அந்த ஒன்றுபட்ட இந்தியாவின் ஏகோபித்த குரல் காங்கிரசின் வாயிலாக மட்டுமே வருவதாகவும் அவர் நினைத்துப் பேசியுள்ளார்.

இந்திய துணைக்கண்டத்தில் பல்வேறு அரசுகள், வேறுபட்ட மொழிகள், மாறுபட்ட கலாசாரங்கள் ஒன்றாகப் பிணைத்துப் போடப்பட்டுள்ளன. இந்தியாவில் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் எழுகின்ற குரல்கள் மொழியால் மட்டுமல்ல, பண்பாட்டால், கருத்தால், விருப்பு வெறுப்புகளால் ஒன்றுக்கொன்று மாறுபட்டும், சில சமயங்களில் ஒன்றுக்கொன்று முரணாகவும் இருக்கின்றன. மராட்டியர் எழுப்புகிற குரல், குஜராத்தியருக்குக் கசப்பாக இருக்கிறது, வங்காளத்திலிருந்து வருகிற குரல் பீகார் மாகாணத்திற்குப் பிடிப்பதில்லை, பீகாரின் குரலை அஸ்ஸாம் ஏற்றுக்கொள்வதில்லை, அஸ்ஸாம் மாகாணத்தின் குரலை அதனுள் ஒருபகுதியெனக் கருதப்படும் நாக நாட்டினருக்கு நஞ்சாக இருக்கிறது, நாக நாட்டினரின் குரலோ டில்லி அதிபரின் காதில் விழும்போது வேதனையைத்தருகிறது, ஆனல் அந்த டில்லி அதிபரின் குரல் இங்கே கேட்க அனுமதிக்கமாட்டோம் என குருத்துவாரத்தில் பஞ்சாப் பகுதியினர் விரட்டியடிக்கின்றனர், பஞ்சாபின் கோரிக்கையை உத்தரபிரதேசம் ஒத்துக்கொள்வதில்லை, பாரத பூமி முழுவதும் தமது பாதத்தில் கிடப்பது போல எண்ணிக்கொண்டு உத்தரப்பிரதேசம் இடும் உத்தரவுகளை சென்னை மாகாணம் வேதனையுடன் கேட்டுக்கொள்ளுகிறது, சென்னையிலிருந்து கிளம்பும் குரல் வடநாட்டில் பலரால் புரிந்துகொள்ள முடிவதில்லை, புரிந்தவர்களால் ஒத்துக்கொள்ள முடிவதில்லை. இந்தியாவில் ஒரே குரலா, ஒரே கருத்தைத் தெரிவிக்கிறது. இல்லை, கோபமும், கொக்கரிப்பும், கோரிக்கைகளும், கொந்தளிப்பும், இழிச்சொற்களும், பழிமொழிகளும், 'நான் சென்ஸ்'

பேச்சுகளும், அதற்குக் கண்டன அறிவிப்புகளும், இப்படித்தானே பல குரல்கள், பலவித விருப்பு வெறுப்புகளை உள்ளடக்கி வெளி வருகின்றன. இந்த நிலையில் ஒன்றுபட்ட இந்தியாவோ, அதற்குத் தனியாக ஒரு குரலென்றோ எதுவுமே கிடையாது. உயரத்தில் உட்கார்ந்துகொண்டு உரக்கக் கூவுபவனுடைய குரல் மட்டும், மற்றக் குரல்களை அமுக்கிக்கொண்டு இருக்கிறதேயன்றி, அந்த ஒருகுரல் மட்டும் இந்தியாவின் ஒன்றுபட்ட குரலாகிவிடாது. உரத்துக் கூவிக்கொண்டிருப்பவனின் குரல் சிறிது கம்மினாலும், சத்தம் குறைந்தாலும், உடனே மற்றக் குரல்கள் முன்னைவிட அதிகச் சத்தத்துடன்தான் வரும். ஒரே இடத்தில், பலவிதச் சத்தங்கள் இருப்பதால் எதுவும் விளங்குவதில்லை, எந்தக் காரியமும் செம்மையாக நடைபெறவும் முடியாது.

இந்தியாவில் மட்டுமல்ல, காங்கிரஸில்கூட, ஒரேவிதக் குரல் வரவில்லை. இமயத்திலிருந்து, தெற்கு குமரிமுனை வரை இயங்குகிற பல்வேறு பிரதேசக் காங்கிரஸ்காரர்கள் ஒற்றுமையாக தமது கருத்தைத் தெரிவிப்பதில்லை. ஒவ்வொரு பிரதேசக் காங்கிரஸ் அமைப்பிலிருந்து, குத்தும், வெட்டும், கூக்குரல் சண்டைகளும், நம்பிக்கையில்லாத் தீர்மானங்களும், கண்டனக் குரல்களும், சோகக் கதைகளும், கோபப் பதில்களும் இவைகளே வருகின்றன. பொதுவாக, காங்கிரஸ் தலைவர் நேருபண்டிதர், "ஒன்றுபட்ட இந்தியா, உன்னதமான கலாசாரம்," என்றெல்லாம் ஒற்றுமை விளக்கங்களை வலியுறுத்திக்கூறியபோதிலும், காங்கிரசில் பணியாற்றும் பலரால் தமது பகுதியை மறந்துவிட முடிவதில்லை, தமது மொழி, தமது உரிமைகள், தமது பொருளாதார வளம், இவைகளைப் பற்றி, அவர்களையும் அறியாமலே அவர்களுக்குக் கவனமும், அக்கறையும் பிறந்துவிடுகின்றன. காரணம், இந்திய துணைக்கண்டம் முழுவதையும் ஒரே ஆதிபத்தியத்தின் கீழ் நிலைபெறச் செய்ய காங்கிரஸ் தலைவர்கள் பாடுபட்டபோதிலும், வேற்றுமைகள்—ஒருவரையொருவர் ஒத்துக்கொண்டு ஏற்றுக்கொள்ளமுடியாத வேறுபாடுகள், மொழி வகையிலும், கலாசாரவகையிலும், பொருளாதார அமைப்பிலும், வரலாற்று வழியிலும் இருக்கின்றன.

காங்கிரஸ் தலைமைபீடத்தின் ஆணவக் குரல், டில்லி ஆதிபத்தியத்தின் குரலாக, இந்தி

✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤

யாரைப் பார்த்தாலும், எதைக் கேட்டாலும் 'சுதந்திரக் குழந்தை! சுதந்திரக் குழந்தை என்கிறார்கள். அந்தக் குழந்தைக்குப் பாலூட்டி விட்டால் மட்டும் போதாது—தாலாட்ட வேண்டும்-சொக்காய் போடவேண்டும்-விளையாட்டு காட்டவேண்டும்-இது அத்தனையையும் தாயே, செய்துவிட முடியாது. மாமன்மார் விளையாட்டுப் பொம்மைகள் வாங்கி வர, தங்கை தாலாட்டுப் பாட, உற்றார் குழந்தையைத் தூக்கி வைத்துக்கொஞ்ச—இவ்விதம் வளரவேண்டும், அக்குழந்தை!

—அறிஞர் அண்ணா

✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤

ஏகாதிபத்தியத்தின் குரலாக, டாடா, பிர்லா போன்ற வடநாட்டு முதலாளிகளின் குரலாக, இருக்கிறது. மற்றவைகளை அடக்கிவிட்டு, மற்றவர்களுக்கு வாய்ப்பூட்டு போட்டுவிட்டு, ஏகாதிபத்திய ஆசை அங்கே எக்காளமிடுகிறது. ஆதிக்கவெறிகோபக்குரலில் பேசுகிறது. சர்வாதிகாரப் போக்கு கனத்த குரலிலே உத்தரவுகளை வீசுகிறது. காங்கிரசிலே, ஏழையின் குரல் கேட்கப்படவில்லை, அல்லற்படும் தொழிலாளரின் குரல் அங்கே கேட்கப்படவில்லை, உரிமையின் குரல், உயர்தர பண்பாட்டின் குரல், நீதியின் குரல், நேர்மையின் குரல், தென்னாட்டின் குரல், திராவிடத்தின் குரல் நிச்சயமாக அங்கே கேட்கவில்லை.

"காங்கிரசின் குரல் இந்தியாவின் குரலாகும்" என்று நேரு பண்டிதர் முழங்கிய போதிலும், காங்கிரசிலும் தனிப்பட்ட குரல் கிடையாது, இந்தியாவிலும் தனிப்பட்ட குரல் வரவில்லை. மொழி, பண்பாடு, வரலாறு, பொருளாதாரம், இவைகளால் பிளவுபட்ட இந்திய துணைக்கண்டத்தின் வெவ்வேறு பகுதியிலிருந்து, வெவ்வேறு குரல்கள்தாம் வருகின்றன. வேறுபட்டவர்களிடமிருந்து வேறுபாடுடைய குரல்கள் வருவதில் தவறில்லை. ஆனால் வேறுபட்ட குரலுடையவர்களையெல்லாம் ஒரே இடத்தில்—ஒரே வரிசையில்—ஒரே அமைப்பில் கட்டுப்படுத்தி வைக்க முயலுவதுதான் தவறாகும். கூச்சல் நீங்க, அரசியல் தொல்லைகள் குறைய, அவர்களையெல்லாம் தனிப்பட்டு வாழ, தமது இதய கீதத்தைத் தனிமையாக இசைத்திட அனுமதிக்க வேண்டும். அதுதான் முறையும், நிலைமையும் ஆகும்.

கருத்துக் கதிர்

ஆதாரக் கல்வித்திட்டம்—அநாகரிக காலத்திற்கு ஓர் அழைப்பு

ஆதாரக் கல்வி என்பதன் பேரால் இந்தியாவில் புகுத்தப்படும் கல்வித் திட்டங்கள், நாட்டு மக்களை அறிவுச்சூன்யர்களாக ஆக்குவதுடன், நாட்டின் முன்னேற்றத்தை எவ்வளவுதூரம் தடைப்படுத்துகிறது என்பதை, அண்மையில் ராஜபுதனத்துப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் அறிவுரை வழங்கிய சர் மிர்சா இஸ்மாயில் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

“ஆதாரக் கல்வி முறையால் இரண்டுவிதப் பேராபத்துக்கள் உண்டாகின்றன. முதலாவதாக, விற்பனை செய்யவல்ல பொருள்களை ஏதாவது சில கைத்தொழில்களை கற்றுக்கொள்வதன்மூலம் இளஞ்சிறுவர்கள் செய்யவேண்டுமென்பது; இரண்டாவதாக, புத்தகங்களைப் படிப்பதன்மூலம் அறிவு விளக்கம் பெறுகிற முறையை குறைத்துக்கொள்ளவேண்டுமென்பது. இந்த இரண்டு கருத்துக்களும், மக்களை நாகரிகப் பாதையிலிருந்து திருப்பி, அநாகரிகத்துக்கு அழைத்துச் செல்வதாகும். மேலும் கல்வித்துறையின் நோக்கத்தையே மறந்து இளம் சிறுவர்களை யெல்லாம் ஆலைத் தொழிலாளர்களாக மாற்றுவதாகும்” இவ்வாறு மிர்சா இஸ்மாயில், மிகக் கடுமையான முறையில், ஆதாரக் கல்வியின் பிற்போக்குத்தன்மையைக் கண்டித்துள்ளார்.

ஆதாரக்கல்வி அடிப்படைத் தத்துவங்களாக, கைத்தொழில் கற்றுக்கொள்வதும், புத்தகப் படிப்பைக் குறைத்துவிடுவதும் முக்கியமாக இருக்கின்றன. இந்தியாவின் குறைபாடுகளை நீக்க, ஆதாரக் கல்வியே சிறந்ததென அதன் பக்கம் வாதிடுவோர் அறிவிக்கின்றனர். அவர்கள் கூறுகிற விதத்தில் ஆதாரக்கல்வித்திட்டங்கள் அமுலாக்கப்பட்டு, வெற்றியடைந்தால்கூட நாட்டில் நிலவிடும் குறைபாடுகள் எவ்வாறு நீக்கப்படும் என்று தெரியவில்லை. ஆதாரக் கல்வித்திட்டத்தின்படி, சிறுவர்கள் கைத்தொழிலில் ஈடுபடவேண்டியிருக்கிறது. நாட்டில் கைத்தொழில் புரிவதற்குவேண்டிய அளவு தொழிலாளர்கள் இல்லை யென்றால், இந்தத் திட்டத்திற்கு ஓரளவுக்கு அவசியமிருக்கிறது. ஆனால் நாட்டு நிலையோ, அதற்கு நேர்மாறாக இருக்கிறது. சிறு கைத்தொழில்கள் புரியும் கோடிக்கணக்கான மக்கள், வேலையின்றி வாடும்பொழுது, அவர்களுக்குத் தக்கமுறையில் வேலைதந்து உதவமுடியாத நிலையில், சிறு குழந்தைகளையும் திரட்டி, மென்மேலும் அந்தக் கைத்தொழில்களில் ஈடுபடுவோர் தொகையைப் பெருக்குவதால் என்ன பலன் கிடைக்கக்கூடும்? தொழில்கள் ஏராளமாக இருக்கின்றன, அதற்கு போதுமான தொழிலாளர் இல்லையென்றால், வயது குறைந்தவர்களாவது தொழில்களில் ஈடுபடட்டும் என்று திட்டமிடலாம். இங்கு ஒவ்வொரு தொழிலுக்கும், பத்துமடங்கு அதிகமான ஆட்கள் இருக்கின்றனர். தொழில்கள் புரியத் தெரிந்திருந்தும், புரிவதற்குத் தயாராகவும் இருக்கும் விதத்தில், நாட்டில் கோடிக்கணக்கான வேலையற்றோர் இருக்கின்றனர். அவர்களுக்கு வேலை தந்து, வாழ்வு தருவதற்கானத் திட்டங்கள் இப்பொழுது வேண்டுமேயன்றி, தொழிலாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தி, அதனுடன் வேலையற்றவர்களின் தொகையையும் உயர்த்திவிடும் திட்டங்கள் நாட்டுக்குத் தேவையற்றன.

இரண்டாவதாக, ஆதாரக் கல்வியைப் பரப்புவோர், புத்தகப்படிப்பைக் குறைத்துவிடப் பாடுபடுகின்றனர். நாட்டில் நிலவிடும் நானாவிதக் குறைபாடுகளுக்குப் புத்தகப்படிப்பில் காரணங்காண முயல்கின்றனர். புத்தகப் படிப்பைக் குறைத்துவிடுவதன்மூலம், தொழில் முறைகள் வளர்ந்துவிடுமென அவர்கள் நம்புகின்றனர். தொழில் முறைகள் மேம்பாடடைந்துள்ள மேனாடுகளெல்லாம், புத்தகப் படிப்பில் அதிக வளர்ச்சியடைந்துள்ளதால்தான் அந்த நிலை அடைந்துள்ளன. தொழில் முறைகள் வளரப் புத்தகப்படிப்பு தடையாகாது. உண்மையான தொழிலறிவு ஏற்பட்டு, தொழில் முறைகள் செழிக்கவேண்டுமென்றால், புத்தகப்படிப்பினால்தான் அது முடியும். சிறந்த முறையில், புத்தகப்படிப்பின் மூலம் கல்வியறிவு பரவாத காரணத்தினால்தான் நம் நாட்டில் தொழில் முறைகள் வளர்ச்சியடையாமல்,

பல நூற்றுண்டுகளாக பழைய நிலையிலேயே இருக்கின்றன. புத்தகப் படிப்பு ஒன்றுமட்டும் போதும், அறிவு விளக்கம்பெற, என்று யாரும் கூறவில்லை. ஆனால் குழந்தைப்பருவம் நீங்கலாக மற்ற மாணவப் பருவங்களில் புத்தகங்களின் மூலமாக ஊட்டப்படும் எண்ணங்களின் தொகுப்பே, அறிவு விளக்கத்தில் முதன்மையாகும். மக்களின் அறியாமையைப் போக்கிட, அறிவு வளர்ச்சி ஒன்றினால் முடியுமே தவிர ஆதாரத் திட்டங்களாலோ, இளஞ் சிறுவர்களை கைத்தொழில் ஆட்களாக மாற்றுவதாலோ அடைந்துவிடாது. மிர்சா இஸ்மாயில் குறிப்பிட்டதைப்போல, ஆதாரத்திட்டம் மக்களை அறிவு விளக்கம் பெற்றவர்களாகச் செய்யாது, மாறாக நாகரிகப் பாதையில் முன்னேறும் மக்களைத் திருப்பி, பிற்போக்குத் தன்மைக்கு—அநாகரிக காட்டுமிராண்டிக் காலத்துக்கு அழைத்துச் செல்வதாகும்.

ஃ ஃ ஃ

தி—கொ. தேர்தல்

திருவாங்கூர்—கொச்சி தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள், தமது பிரசாரங்களை மிகவும் மும்முரமாக ஆரம்பித்துவிட்டன. 108 பேர் கொண்ட சட்ட சபை அமைப்பில், 44 பேர்களை மட்டும் பெற்றிருந்த காங்கிரஸ் மந்திரிசபை, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது வீழ்ந்தது. அதன் விளைவாகச் சட்டசபைக் கலைக்கப்பட்டு, புதுத்தேர்தல்கள் வந்துள்ளன. இந்தச் சமயம் காங்கிரசுக்கெதிராக, மற்ற இடதுசாரிக் கட்சிகளனைத்தும் ஒன்றுபட்டு போராடயிருக்கின்றன. சென்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி திருவாங்கூர்—கொச்சி சட்டசபையில் சிறுபான்மைக் கட்சியாகவேத் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆயினும், எதிராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஒன்றுகூடி மந்திரி சபையமைக்கும் வாய்ப்பில் வெற்றிபெறாததால் சிறுபான்மைக் கட்சியாயிருந்தபோதிலும், தனிப்பட்டவர்களுடனும், சிறிய குழுவினருடனும் ஒத்துப்போய், காங்கிரஸ் மந்திரிசபையமைத்தது. முன் தேர்தலில் கிடைத்த தோல்வியின் கறையை நீக்க, இந்தத் தேர்தலில் வெற்றியடைய காங்கிரஸ் தன் முழுபலத்தையும் திரட்டி போட்டியிடுகிறது. திருவாங்கூர்—கொச்சி தேர்தலில் அங்குள்ள காங்கிரஸ் செல்வாக்கு, பலம் இவைமட்டும் உபயோகப்படுத்தப்படவில்லை, வெளியிடங்களிலிருந்தும் தருவிக்கப்படுகிறது. இந்தியா முழுமையுமுள்ள காங்கிரசின் செல்வாக்கு, பத்திரிக்கை, பிரசாரபலம்,எல்லாம் திருவாங்கூர்—கொச்சி தேர்தலில் காங்கிரசுக்கு உதவியாகத் திருப்பப்பட்டுள்ளன.

ஆனால் காங்கிரஸ் தேர்தல் பிரசாரத்தைத் துவக்கிவைத்து, பொதுக்கூட்டங்களில் பேசச் சென்றவர் சென்னை மாநில முதன்மந்திரி கனம் ஆச்சாரியார்! பாவம், அவரோ தேர்தல் என்ற தொல்லையறியாதவர்; தேர்தலில் நிற்காமலே கவர்னரின் தயவில் சட்டசபைக்குள் நுழைந்து, மந்திரிசபை யமைத்திடும் தந்திர வித்தையைக் கற்றவர்! அவரைப் போய் தேர்தல் பிரசாரத்தைத் துவக்கிவைக்க ஏனோ அழைத்தனர் என்று தெரியவில்லை. திருமணம் நடத்தும்பொழுது, மணமக்களை வாழ்த்தி நல்லுரை வழங்க ஒரு பிரமச்சாரியை வரவழைப்பதுபோல், தேர்தலை வெறுத்திடும் ஒருவரை அவர்கள் வரவழைத்திருக்கின்றனர். ஒருவேளை, இந்தப் பிரமச்சாரி தானாக மனம்விரும்பி கல்யாணத்தேர்தலை வெறுத்தவரல்ல, முடியாத காரணத்தால்—விரும்பினாலும் கிடைக்காது என்ற காரணத்தால் அவர் சூழ்நிலை நிர்ப்பந்தத்தினால் அப்படியிருக்கின்றார் என்று அவர்கள் கருதி அழைத்திருக்கக்கூடும்! எப்படியிருந்தாலும், தேர்தலுக்கு நிற்காமல், தேர்தலில் போட்டியிட்டு, வெற்றிபெற்று, மிகுந்த நம்பிக்கையுடன் சட்டசபைக்குள் நுழைந்தவர்களையெல்லாம் பின்னால் தள்ளிவிட்டு, ஆச்சாரியார் மந்திரிபதவியைப் பிடித்துவிட்டார், அத்துடன். தேர்தலில் நின்று தோற்ற ஒருவரைச் சகா மந்திரியாக வைத்திருக்கிறார். அத்துடன் தேர்தல் என்றால் என்னவென்றே தெரியாமல்—கவர்னர் தயவில்கூட மேல்சபையில் இடம் பெறாத இருந்த ஒருவரை மற்றொரு மந்திரியாகவும் அவர் நியமித்திருக்கிறார். ஜனநாயகப் பண்பில், தேர்தல் முறையில் இவ்வளவு நம்பிக்கையுள்ள ஒருவர்தான் தி. கொ தேர்தல் பிரசாரத்துக்கு சென்றிருக்கிறார், கள்ளத்தனத்துக்குப் பேர்போனவள் கற்பைப்பற்றி உபதேசம் செய்வதுபோல!

கனம் ஆச்சாரியார் மட்டுமல்ல, வெளியிடங்களிலிருந்து பல காங்கிரஸ் தலைவர்கள் வரவழைக்கப்படுகின்றனர், காங்கிரசின் பிரசாரத்தை நடத்திவைக்க. பம்பாய் மாகாணத்து காங்கிரஸ் தலைவர், படேலின் வாரிசு என்று

கூறப்படும் எஸ். கே. படீல் அவர்களும் தி. கொ. தேர்தல் பிரச்சாரத்துக்கு வருகிறாராம். இவர்களையெல்லாம் விட, காங்கிரசின் ராஷ்டிரபதி—இந்தியாவின் முடிசூடா மன்னர்—ஆசியாவின் ஜோதியாக விளங்கிடும் நேரு பண்டிதர் அவர்கள்கூட, திருவாங்கூர்—கொச்சிப் பகுதியில் புயல்வேகத்தில்-எவ்வளவு சேதம் விளைவிக்கும் என்று தெரியவில்லை—பிரச்சாரம் செய்யப்போகிறாராம். அவர் ஆறு நாட்கள் மட்டுமே அங்கு தங்கப்போகிறார், அதற்குள் ஆயிரம் மயில்களுக்குமேல் சுற்றி, சுமார் நூறு கூட்டங்களுக்குமேல் பேசப் போகிறாராம்! அவரைவிடப் பெரிய பிரச்சாரகர் யார் கிடைக்க முடியும்.

திருவாங்கூர்—கொச்சித் தேர்தலில் காங்கிரஸ் தலைவர்கள் ஏன் இவ்வளவு அளவுக்கு மீறிய ஆத்திரத்துடன் கலந்துகொள்ளுகின்றனர், எப்படியேனும் காங்கிரஸ் வெற்றியடைய வேண்டுமென்று இந்தியா பூராவுமுள்ள பத்திரிக்கை பலம், பணபலம், பிரச்சாரபலம் எல்லாவற்றையும் பணயம் வைக்கின்றனர் என்று ஆச்சரியம் தோன்றும். கம்யூனிஸ்ட்கள், சோஷியலிஸ்டுகள், புரட்சி இயக்கத்தினர், இடதுசாரிக் கட்சியினர் இவர்களையெல்லாம் தோற்கடித்துவிடவேண்டுமென்று துடிப்பதற்குக் காரணம் உள்நாட்டைமட்டும் பொறுத்த விவகாரமாக அது அவர்களுக்கில்லை. இடதுசாரிக் கட்சிகளிடம் தோற்றுவிட்டால், உலக அரசியலில் அமெரிக்கா தன்னைப்பற்றி என்ன எண்ணுமோ, பிரிட்டன் என்ன பேசுமோ என்ற கவலை காங்கிரஸ் தலைவர்களுக்கு இருக்கிறது. "இத்தேர்தல் முடிவை திருவாங்கூர்—கொச்சி மகாஜனங்கள் மட்டுமல்ல, இந்திய மக்கள் எல்லோரும் கவனித்து வருவார்கள். அதுமாத்திரமல்ல. அமெரிக்கா, இங்கிலாந்து ஜனங்கள் கூட எதிர்பார்த்திருப்பர். நேருஜியின் கவுரவம் இப்பொழுது திருவாங்கூர் கொச்சியில் சோதனைக்குள்ளாகியிருக்கிறது," என்று ஆலப்புழையில் நடந்த கூட்டத்தில் ஆச்சாரியார் சொல்லியிருக்கிறார். அமெரிக்கா என்ன நினைக்கும், பிரிட்டன் எவ்வாறு பேசும் என்ற கவலை இவருக்கேன் வருகிறது, வெளிநாடுகள் பலப்பல இன்னும் இருக்கும்பொழுது? அதிலும் நேருஜியின் கவுரவம் அங்கு பறிபோய் விடும் என்று ஏன் வருத்தப்படுகிறார்! இடதுசாரிகளுக்கு வெற்றி கிடைத்துவிட்டால், எங்கே அமெரிக்கா உதவி குறைந்துவிடுமோ, பிரிட்டனின் ஆதரவு நின்றுவிடுமோ, டாலரின் உறவு அறுந்துவிடுமோ என்ற ஏக்கம்—பயம் காங்கிரஸ் தலைவர்களைப் பிடித்தாட்டுகிறது. எனவே அமெரிக்காவுக்கு நல்லபிள்ளையாக நடந்துகொள்ள, திருவாங்கூர் கொச்சியில் வெற்றிகாட்டவேண்டிய அவசியத்தில் காங்கிரஸ் நிற்கிறது.

மற்றொரு விதத்தில் காங்கிரஸ் தலைவர்கள் பயப்படுகின்றனர். ஏதாவது ஒரு இடத்தில் காங்கிரசுக்கு எதிரான கட்சி மந்திரிசபை அமைத்துவிட்டால், அந்தப்பகுதிக்கும் மத்திய சர்க்காரில் இருக்கும் காங்கிரஸ் தலைமைக்கும் சண்டை மூளும் என்று அஞ்சுகின்றனர். வைக்கம் கூட்டத்தில் பேசும்பொழுது, "மற்றவிடங்களில் காங்கிரஸ் அதிகாரத்திலிருந்து திருவாங்கூர்—கொச்சியில் மட்டும் எதிர்க்கட்சி ஆட்சி செலுத்தினால், தி. கொ. அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் கோழிச் சண்டை ஏற்பட்டுவிடும்" என்று ஆச்சாரியார் குறிப்பிட்டுள்ளார். ஆச்சாரியாருக்கு ஏன் இந்த பயம் வருகிறது? இப்பொழுதுள்ள அரசியல் திட்டத்தில், மத்திய சர்க்காருக்கும்—மாநில சர்க்காருக்கும் உள்ள தொடர்பில் அவ்வளவு கோளாறு இருக்கிறது என்றுதான் அர்த்தம். எல்லாவிடங்களிலும் காங்கிரஸ் மந்திரிசபைகள் இருப்பதால், அவை மத்திய சர்க்காரிலிருக்கும் காங்கிரசுக்குப் பணிந்துபோய்விடுகின்றன, குட்டுப்பட்டாலும்—வெளியில் சொல்லாமல் இருந்துவிடுகிறார்கள். மற்றொரு கட்சி ஒரு மாநிலத்தில் ஆட்சி ஏற்றால், மத்திய சர்க்காருக்கு அடிபணிந்து இருக்காது என்று எதிர்பார்க்கின்றனர். அதனால்தான் திருவாங்கூர் கொச்சியில் எதிர்க்கட்சிகள் வெற்றியடைந்தால், அந்த அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் கோழிச்சண்டை ஏற்படுமென்று ஆச்சாரியார் ஆருடம் கணிக்கிறார். கோழிச்சண்டை என்றால் இரண்டு சேவல்கள் சந்திக்கும்பொழுதுதானே சண்டை ஏற்படுகிறது. இப்பொழுதுள்ள நிலையில், டில்லி சர்க்காரில் ஒரு சேவற்கோழி இருக்கிறது. மற்ற மாநில அரசாங்கத்திலெல்லாம் பெட்டைக்கோழிகள் இருக்கின்றன. எனவே சேவற்கோழியால் இந்தப் பெட்டைக்கோழிகளைச் சமாளித்துப் போய்விடுகிறது, மற்றொரு சேவற்கோழியைச் சந்திக்க அது பயப்படுகிறது!

சுடர் அணைந்தது!

தோழர் எம். என். ராய் இறந்தார்.

திகைப்பையும் கலக்கத்தையும் ஒருங்கே கொட்டி, நெஞ்சை வேக வைக்கும் வேதனைச் செய்தியாகும். அந்தச் செய்தியை உண்மையென ஏற்றுக்கொள்ளக்கூட, மனம் ஒருகணம் மறுக்கிறது. புயலில் சிக்கிய படகு, 'கரை கண்ணுக்குத் தெரிகிறது' என்று ஆரவாரத்துடன் வரும் பொழுது, வழியில் மறைந்திருந்த கற்பாறைமீது மோதி அமிழ்ந்துவிடுவது போல, சில காலத்துமுன் கடுமையாக நோய்வாய்ப்பட்டு, குணமடைந்து "இனிக் கவலையில்லை" யென்று ஆறுதலைப்பெற்ற நேரத்தில், திடீரென வாழ்விலிருந்து மறைந்துவிட்டார். மலைச்சரிவில் தவறிவிழுந்ததால், ஏற்பட்ட பலத்த காயங்களால் பிரஞ்ஞையிழந்து, கைகால்களைச் சரியாக அசைக்கமுடியாமல் சிலகாலம் இருந்தார். பின் கொஞ்சம் கொஞ்சமாக குணமடைந்து, நடமாட ஆரம்பித்தார். உடல் நலத்தை முற்றிலும் செம்மையாக்க, மேல்நாட்டுக்குப் போகவேண்டுமென்றும் அவருடைய பயணம் திட்டமிடப்பட்டிருந்தது. வெளிநாட்டுக்குச் செல்வதற்காக, வந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளுமுன், மரணத்தின் அழைப்பை ஏற்றுக் கொண்டு, அவர் சென்றுவிட்டார்!

பெரும் வீரர்! இருபதாம் நூற்றாண்டில் நடந்தவற்றில் அவர் கலந்துகொள்ளாத புரட்சிகள் இல்லையென்றே சொல்லலாம். மேற்கே மெக்சிகோ நாட்டிலிருந்து கிழக்கே சீனாவரை ஏற்பட்ட புரட்சிகள் ஒவ்வொன்றிலும் அவர் தீவிரப் பங்கேற்று உழைத்தார். ருஷியப் புரட்சி—உலகத்தையே உலுக்கிய, இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றையே திருப்பிவிட்ட ருஷியப் புரட்சியின்பொழுது, மாவீரன் லெனின் விடுத்த அழைப்பின்பேரில், அங்கு சென்று புரட்சியியக்கத்துடன் பணியாற்றி, புதியதோர் உலகு நிர்மாணிக்கப்படுவதைக் கண்டார். இவ்வாறு உலகெங்கும் புரட்சிக் கனலை மூட்டிவிட்டு—இளைஞர் உள்ளங்களிலெல்லாம் புதியதோர் எழுச்சியை காணச் செய்துவிட்டு, இந்தியா திரும்பி, டேராடூனில் நிலைபெற்ற ஒரு பெருஞ்சுடர் அணைந்தது! துன்பவிருளில் பலரை ஆழ்த்திவிட்டு, ஒளி விளக்கு மறைந்தது! புரட்சிக்கனலைப் பரப்பியவர், புத்துலகம் காணவேண்டுமெனக் கிளம்பியவர், அறிவியல் பகுதிகளனைத்தையும் கற்றுத் தேர்ந்தவர் பலவகை மொழிகளில் பேசவும் நன்கு எழுதவுமான ஆற்றல் பெற்றவர், மூடநம்பிக்கைகள் முறியடிக்கப்பட்டு, அறிவொளி விளங்கிடவேண்டுமெனப் பாடுபட்டவர், இந்திய பகுத்தறிவியக்கத்திலும், உலகப் பகுத்தறிவியக்கத்திலும் முதன்மையாகப் பங்குகொண்டவர், சிறந்த எழுத்தாளர், தத்துவ ஞானி, அறிஞர், நண்பர்—தோழர் ராய் இறந்துவிட்டார்! வயது 61 தான் ஆகிறது. இன்னும் பல ஆண்டுகள் வாழக்கூடிய வலிவான உடலையும், சோர்வடையாத உள்ளத்தையும் அவர் பெற்றிருந்தார். எதிர்பாராத விபத்தால் அவர் உடல் நலம் குன்றினார், குணமாகிவரும் நிலையில் திடீரென இறந்தார்!

துன்பமும், சோகமும் மனதைக் கப்பிய நிலையில், நமது ஆழ்ந்த அனுதாபத்தை மறைந்த வீரரின் மனைவியார் தோழியர் எல்லென் ராய் அவர்களுக்கும், அவரின் அருகேயிருந்து பணியாற்றிய நண்பர் குழுவினருக்கும் நாம் தெரிவித்துக்கொள்ளுகிறோம்!

மதியை விழுங்கிடும் பாம்புகள்!

அண்மையில் சந்திர கிரகணம் ஒன்று வந்தது. கிரகணம் என்றால் என்ன? எப்படி ஏற்படுகிறது என்பதுபற்றி விஞ்ஞான வகுப்புகளில், ஆரம்ப நிலையிலிருந்தே படித்திருக்கிறோம். இருந்தபோதிலும், நம் நாட்டில் சந்திர கிரகணம் ஏற்பட்டதும், "சந்திரனை விழுங்கியிருக்கிற பாம்பு விடுவிக்கிறவரை" ஆற்றிலோ, கடலிலோ குளித்து, உபவாசமிருந்து, மந்திரங்களை ஜெபித்து, சந்திரன் படும் துயரைத் தவிர்க்க இங்குள்ளோர் பாடுபட்டனர்! விஞ்ஞானத்தில் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. சந்திரன், பூமி, சூரியன் மூன்றும் முறையே சரியான நேர்கோட்டில் வந்து, பூமியின் நிழலில் சந்திரன் அகப்பட்டுவிட்டால் அதற்குப் பெயர் சந்திரகிரகணம் என்று. ஆனால் அந்த விஞ்ஞானப் படிப்புகளெல்லாம் பள்ளிக்கூடத்துடன் நிறுத்தப்பட்டு, அந்தக் கிரகணத்தன்று பழைய கதையில், பிடித்த பாம்பு போக, நம் நாட்டில் கோடிக்கணக்கான மக்கள் தண்ணீரிலே நின்று ஜபமாலையை உருட்டிவிடக் காண்கிறோம். படிக்காதவர்கள்—விஞ்ஞான நூல்கள் தரும் விளக்கங்களைத் தெரியாதவர்கள் அந்தப் பழங்கதைகளை நம்பி காரியங்கள் செய்வதில் ஆச்சரியமில்லை. ஆனால் நாட்டில் படிக்காதவர்களைவிட, படித்தவர்கள்தான் அந்தப் பழைய கட்டுக்கதைக்கும் மூட நம்பிக்கைக்கும் ஆதரவளித்து வருகின்றனர். சந்திர கிரகணத்தன்று சென்னைக் கடற்கரையில் நின்றுகொண்டிருந்தவர்கள்—ஓர் விரலில் தர்ப்பையைச் சுற்றிக்கொண்டு, மற்றொரு கையில் தண்ணீரை ஏந்தி, மந்திரங்களை முணுமுணுத்துக்கொண்டிருந்தவர்களில் எவ்வளவு பேர் எம். ஏ, பி. ஏ பட்டதாரிகள், மேல்நாட்டுப் படிப்பிலே கரைகண்டவர்கள் இருந்தனர்! மறுநாள் நடக்கும் விஞ்ஞான வகுப்பில் சந்திரகிரகணம், சூரிய கிரகணம் என்றால் எப்படி வருகின்றனவென்று படம் போட்டு, கணக்கு விவரங்களுடன் விளக்கப்போகிற விஞ்ஞான ஆசிரியர்கூட, சந்திர கிரகணத்தன்று மட்டும், தமது விஞ்ஞானப் படிப்பையெல்லாம் மூட்டைகட்டி வைத்துவிட்டு, மடிவேட்டியுடன் மந்திரங்களைச் சொல்லத் தவறுவதில்லை. நமது நாட்டில், படித்தவர்களால்தான் அறிவு வளர்ச்சிக்குப் பெருந்தீங்கு—பெருந்துரோகம் இழைக்கப்படுகிறது. சந்திர கிரகணம்—சூரியகிரகணமென்றால், படித்தவர்கள் அன்று படிக்காதவர்களை—விஞ்ஞான விளக்கம் தெரியாதவர்களையழைத்து, கிரகணம் உண்டாவதற்கான உண்மையான காரணங்களைச்சொல்லி, அவர்களது மூட நம்பிக்கைகளை நீக்கி, அறிவுடையவர்களாக ஏன் ஆக்குதல் கூடாது?

மேல்நாடுகளில் கிரகணம் வருகின்றதென்றால், வானநூல் அறிஞர்கள் சொல்வதை மக்கள் எதிர்பார்க்கின்றனர். இங்கோ வேத சாஸ்திரி எப்பொழுது வருவார் என்று எதிர்பார்க்கின்றனர். கிரகணத்தன்று, நிழலிலே சிக்கிக் குறைந்து காணப்படுகிற சந்திரனின் உருவத்தைப் படம்பிடிக்க, விஞ்ஞானிகள் முயல்கின்றனர், அவர்கள் முன் பெரும் டெலஸ்கோப்புகள் சுழல்கின்றன. இங்கோ கிரகணத்தன்று, ஆற்றங்கரைக்கோ, கடற்கரைக்கோ மக்கள் விரைந்து செல்கின்றனர், அவர்கள் கையில் ஜபமாலை சுழல்கிறது. விஞ்ஞான விளக்கம் அங்கு முதன்மையாக்கப்படுகிறது; இங்கு அந்த விளக்கங்கள் தெரிந்திருந்தும், வேத புராணங்கள் தரும் விளக்கமே முதன்மைபெறுகிறது. அங்கு, கண்ணைத்திறந்து—அறிவுக்கண்ணைத் திறந்து, டெலெஸ்கோப் மூலம் சந்திரனைப் பார்க்கின்றனர், இங்கு கண்ணை மூடிக்கொண்டு, மனக்கண்ணில்—மடமை யிருளில் சந்திரமண்டலத்தையும், அங்கு ராகு கேதுக்கள் நெளிந்து வருவதையும், சந்திரனை ஒரு பாம்பு விழுங்குவதையும் பார்த்துக்கொள்ளுகின்றனர்.

கிரகணத்தின்போது வானத்தில் நிலவும் மதியை எத்தகைய நச்சுப்பாம்பும் விழுங்குவதில்லை, நம்முடைய மதியை—அறிவைத்தான் மூடநம்பிக்கையெனும் நச்சுப் பாம்பு விழுங்கிவிடுகிறது. நமது நாட்டில், மடமையிருளில் நெளிகிற நச்சுப் பாம்புகள்—பேராபத்தைத் தரும் நச்சுக்கருத்துக்கள் ஏராளமாக இருக்கின்றன. அறிவொளி பரப்பி, அவற்றை விரட்டியடித்தால்தான், நாட்டில் நல்வாழ்வு துலங்கும், நல்லின்பம் சேரும்.

எப்படிச் சீர்திருத்துவது?

[தமிழாக்கம் : இரா. நெடுஞ்செழியன்]

பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, ஆட வரும் பெண்டிரும், உலகைச் சீர்திருத்தப் பெரிதும் முயன்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள், கடவுள்களையும், பூதங்களையும், மோட்சங்களையும், நரகங்களையும் உண்டாக்கிப் பார்த்தார்கள்; அவர்கள் புனித வேதங்களை எழுதிப் பார்த்தார்கள், அதிசயங்கள் காட்டிப் பார்த்தார்கள்; கோயில்களையும் இருட்டறைகளையும் கட்டிப் பார்த்தார்கள்; அவர்கள், அரசர்களுக்கும் அரசிகளுக்கும், முடி சூட்டியும் பார்த்தார்கள், முடி கழற்றியும் பார்த்தார்கள்; அவர்கள் மக்களைச் சித்ரவதை செய்தும், சிறைப்பிடித்தும், தோலுரித்தும், நெருப்பிலிட்டும் பார்த்தார்கள்; அவர்கள், மதபோதனை செய்தும் பார்த்தார்கள், வழிபாட்டுரை கூறியும் பார்த்தார்கள்; அவர்கள், உறுதிமொழிகளை யளித்தும்பார்த்தார்கள்; அச்சுறுத்தல்களைச் செய்தும் பார்த்தார்கள்; அவர்கள், மகிழ்ச்சியூட்டிப் பார்த்தார்கள், நயந்துகூறிப்பார்த்தார்கள்; அவர்கள், கற்றுக்கொடுத்தும் பார்த்தார்கள், அதன்படி செய்யச்சொல்லியும் பார்த்தார்கள்; அவர்கள், மக்கள் நாணயமாகவும், நேர்மையாகவும், கடும் உழைப்போடும், நல்ல நலத்தோடும் வாழ்வதற்கு எவ்வளவோ எண்ணற்ற வழிகளில் முயன்று பார்த்தார்கள்; அவர்கள், வைத்தியச் சாலைகளையும் வைத்திய விடுதிகளையும், பல்கலைக் கழகங்களையும் பள்ளிக்கூடங்களையும் கட்டிப் பார்த்தார்கள்; அவர்கள், மக்கள் நன்றாகவும், மகிழ்ச்சிகரமாகவும் வாழ, அவர்களால் இயன்ற மட்டும் செய்துபார்த்தார்கள்; இப்படியெல்லாம் இருந்தும் அவர்கள் வெற்றியடையவில்லை!

ஏன் சீர்திருத்தக்காரர்களெல்லாம் தோல்வியுற்றனர்? ஏன் தோற்றனர்? என்பதை நான் கூறுகிறேன்.

அறியாமை, வறுமை, தீமை ஆகியவைகள் உலகில் நிரம்பிக்கொண்டிருக்கின்றன. சாக்கடையே மருத்துவமனையாக விளங்குகிறது. தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள முடியாத நிலையில், தங்கள் குச்சிவீடுகள்—குடிசைகள் — குகைகள் ஆகியவற்றைக் குழந்தைகளால் நிரப்புகின்றனர். அவர்கள் 'ஆண்டவனையும்', 'அதிர்ஷ்டத்தையும்', 'தரு மதனையும்' நம்பியிருக்கின்றனர். நிகழ்ச்சிகளுக்கான காரணங்களைப் பற்றிச் சிந்திப்பதற்கோ, அல்லது பொறுப்புணர்ச்சியைப் பற்றி உணர்ந்துகொள்வதற்கோ, சிறிதும் அறிவு அற்றவர்களாக இருக்கிறார்கள். அதே சமயத்தில் அவர்கள் குழந்தைகளை விரும்புவதில்லை; ஏனென்றால், குழந்தை ஒரு 'சாபக்கேடு'—அதற்கும் அவர்களுக்கும் 'சாபக்கேடு' என்று எண்ணுகின்றனர். குழந்தை யாராலும் வரவேற்கப்படுவதில்லை; ஏனென்றால், அது ஒரு சுமையாகக் கருதப்படுகிறது. இப்படி வேண்டப்படாத குழந்தைகள்தாம், சிறைக்கூடங்களையும் காவற்கூடங்களையும், வைத்திய சாலைகளையும் பைத்திய சாலைகளையும், கொலைக்களங்களையும் தூக்குமரங்களையும் நிரப்புகின்றனர். ஒரு சிலர்தான் எதிர்பாராத தன்மையாலோ, அல்லது ஆதரவுகிடைத்த முறையாலோ இவற்றினின்றும் தப்பி வெளியேறுகின்றனர்; ஆனால் பெரும் பான்மையோர், அவற்றினின்றும் மீளமுடியாமல், மாண்டொழிகின்றார்கள். அவர்கள் எத்தி நடப்பதாலும், வலிவுகாட்டுதலாலும் பிழைப்புக்கு வழி தேடிக்கொள்கிறார்கள். அவர்கள், தாங்கள் கற்ற

கெட்ட வொழுக்கங்களைத் தங்கள் குழந்தைகளுக்கும் கற்றுக்கொடுக்கிறார்கள்.

இப்படிப்பட்ட தீமைகளுக்கு எதிரில், சீர்திருத்தத் தொண்டுகள்—முயற்சிகள் வலிவற்றனவாகிவிடுகின்றன. 'தருமம்' செய்தல் என்பது, ஒருவிதத்தில், நம்மையறியாமலேயே, குற்றத்தை வளர்க்கும் கருவியாக ஆகிவிடுகிறது!

தோல்வி, இயற்கையின் அடையாளக்குறி போலும்! ஏன்? இயற்கை ஒரு வரையறுக்கப்பட்ட எடுத்துக்காட்டையோ, அறிவையோ கொண்டிருக்கவில்லை! இயற்கை 'நோக்கம்' இல்லாமல் உற்பத்தி செய்கிறது; 'குறிக்கோள்' இல்லாமல நிலைநிறுத்துகிறது; 'எண்ணம்' இல்லாமல் அழிக்கிறது! மனிதன் சிறிதளவு அறிவைப் பெற்றிருக்கிறான்; அதனை அவன் பயன்படுத்த வேண்டும். மனித சமுதாயத்தை செம்மைப்படுத்த நம்பிவிடுவதற்கான துண்டுகோல், அறிவுடைமையேயாகும்!

நம் முன் நிற்கும் முக்கிய கேள்வி, அறியாமையும், வறுமையும், தீமையும், தங்கள் குழந்தை குட்டிகளோடு உலகை நிரப்பிக்கொண்டிருப்பதை, நம்மால் தடுத்து நிறுத்த முடியுமா? என்பதுதான்.

அறியாமையும் தீமையும் என்ற பெருவெள்ளம் ஆழமான, நாகரிகம் என்ற மிஸிஸிபி ஆற்றில் விழாதவாறு தடுத்து நிறுத்த நம்மால் ஆகுமா?

இந்த உலகம், எப்பொழுதும், அறியாமை உணர்ச்சிக்கு இரையாகிக்கொண்டுதானிருக்க வேண்டுமா? நிகழ்ச்சிகளுக்கான காரணங்கள், எல்லா மக்களாலும் கண்டறிந்துகொள்ளும்படியான அளவுக்கு, இந்த உலகம் நாகரிகப்படுமா?

குழந்தைகளைப்பற்றிக் கவலைப்படாத—குழந்தைகளைப் பெருஞ் சுமைகளாகவும், 'சாபக்கேடு'களாகவும் கருதுகின்ற ஆடவரும் பெண்டிரும் ஏன் குழந்தைகளைக் கொண்டிருக்க வேண்டும்? ஏன் கொண்டிருக்கவேண்டும்? ஏனென்றால், அவர்கள், அறிவைவிட மிக்க உணர்ச்சி வயப்பட்டிருக்கிறார்கள்; மனச்சான்றைவிட மிக்க உணர்ச்சிகொண்டிருக்கிறார்கள்; பகுத்தறிவைவிட மிக்க உணர்ச்சி பெற்றிருக்கிறார்கள்!

எழுத்தின் மூலமாகவோ, பேச்சின் வாயிலாகவோ, நீங்கள், அவர்களைச் சீர்திருத்த முடியாது! போதனை புரிவதன் மூலமோ கொள்கையைச் சொல்லுவதன் வாயிலாகவோ நீங்கள், அவர்களைச் சீர்திருத்த முடியாது! உணர்ச்சி, இப்பொழுதும் சரி, எப்பொழுதும் சரி செவிடாகவே இருந்துவந்திருக்கிறது. சீர்திருத்தத்திற்காகக் கொள்ளப்பட்ட இந்தக் கருவிகளெல்லாம், எவ்வகையிலும் பயன்படாமல்போய்விட்டன. குற்றவாளிகள், நாடோடிகள், பிச்சைக்காரர்கள், தோல்வியுற்றார் ஆகியோர் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகின்றனர். சிறைக்கூடங்கள், காவற்கூடங்கள், ஏழை விடுதிகள், பைத்தியக்கார விடுதிகள் ஆகியவை எண்ணிக்கையில் வளர்ந்துகொண்டே போகின்றன. மதம் எதும் செய்ய முடியாமல் தவிக்கிறது! சட்டம் பக்களைத் தண்டிக்கும்; ஆனால், அது குற்றவாளிகளைச் சீர்திருத்தவும் செய்யாது, குற்றத்தைத் தடுக்கவும் செய்யாது. தீமையின் அலைகள் எழுந்த வண்ணம் இருக்கின்றன. தீமை ஆற்றல்களை எதிர்த்துத் தொடுத்திருக்கும் போர், இரவின் இருளை எதிர்த்துப் போரிடும் மின்மினிப் பூச்சிகளின் சண்டையைப்போல, பயனற்றதாகவே இருந்துவருகிறது.

ஆனால் ஒரே ஒரு நம்பிக்கை மட்டும் இருந்து வருகிறது!

அறியாமை, வறுமை, தீமை, ஆகியவைகள் பெருக்கப்படுவது நிறுத்தப்படவேண்டும். ஒழுக்கபோதனையின் மூலம் இதனைச் செய்துவிட முடியாது. பேச்சின் மூலமோ எடுத்துக்காட்டின் வாயிலாகவோ இதனைச் செய்துவிட முடியாது. மதத்தினாலோ அல்லது சட்டத்தினாலோ, போதனை புரிபவனாலோ அல்லது தூக்கு போடுபவனாலோ இதனைச் செய்துவிட முடியாது. உடலை வற்புறுத்துவதனாலோ அல்லது உள்ளத்தை வற்புறுத்துவதனாலோ இதனைச் செய்துவிட முடியாது. இதனைச் செய்ய வேண்டுமானால், ஒரே ஒருவழிதானிருக்கிறது.

அறிவியல், பெண்மகளை, அவளுக்கு அவளை சொந்தக்காரி என்றும், அதிகாரி என்றும் சொல்லும் வகையில், அவளை ஆக்கவேண்டும். மனித சமுதாயத்திற்குப் பாதுகாப்பு அளிக்கும் ஒரே பாதுகாப்பாளனான அறிவியல், ஒருபெண், தான் ஒரு குழந்தைக்குத் தாயாக

ஆகவேண்டுமா வேண்டாமா என்பதை முடிவு செய்துகொள்ளும் ஆற்றலை, அவள் கையில் கொடுக்க உதவிபுரியவேண்டும்.

முழுக்கேள்விக்கு இதுதான் சிறந்த விடையாகிறது. இது பெண்களை விடுவிக்கிறது. இதனால் குழந்தைகள், வரவேற்கப்படும் குழந்தைகளாகவே பெற்றெடுக்கப்படுவார்கள். அக்குழந்தைகள் அன்போடு வாரி அணைக்கப்படுவர்; பரிவோடு பால் குடிக்கவிடப்படுவர். இல்லங்கள்தோறும் அவர்கள் ஒளியும் மகிழ்ச்சியும் ஊட்டுவார்கள்; இல்லங்கள் பொலிவோடும் பூரிப்போடும் காணப்படும்.

மக்களுக்கு விடுதலை வழங்குவதைவிட, அவர்களை அடிமை வாழ்வில் வைத்திருப்பதே உண்மையும் தூய்மையும் ஆகும் என்றும், அறிவு பெறுவதைவிட, அச்சங்கொண்டிருப்பதே பாதுகாப்புக்கான வழி என்றும், மற்றவர்களின் கட்டளைகளுக்கு யார் கீழ்ப்படிந்து நடக்கிறார்களோ அவர்களே உண்மையில் நல்லவர்கள் என்றும், அறியாமை என்னும் நிலத்தில்தான் நன்மை என்னும் நறுமலர் வளரும் என்றும் நம்பிக்கொண்டிருக்கும் ஆடவரும் பெண்டிரும், அறிவியலின் இந்த ஆற்றல் கண்டு, திகைப்படைந்த முகங்களைத், தங்களின் முன்னேற்றத் தடுப்புக் கைகளால், வெட்கப்பட்டு மூடிக்கொள்வார்கள் என்பது உறுதி!

ஒளி தீமையின் பகை என்றும், இருளில்தான் தூய்மை நிலவுகிறது என்றும், மக்கள் தங்களைப்பற்றி அறிந்துகொள்வது மிக அபாயகரமானது என்றும், தங்களுடைய நலனுக்குப் பாதகமாக இருக்கின்ற இயற்கையின் உண்மைகளை ஆராய்வது மிகக் கேடுபயக்கும் என்றும் நினைக்கும் ஆடவர்—பெண்டிர், அறிவு, உணர்ச்சியை அடக்கியாளும்படி செய்யப்பட வேண்டும் என்ற எண்ணத்தைக் கண்டு, உறுதியாக அச்சப்பட்டுப் போவார்கள்!

ஆனால், என்று ஆடவரும்—பெண்டிரும், சுற்றுச் சூழ்நிலைகளுக்கான காரணங்களைத் தங்கள் பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்தும், தங்கள் ஒழுக்க அறிவினைக் கொண்டு ஆராய்ந்தும் பார்க்கிறார்களோ அந்த நாளையே நான் ஆவலோடு எதிர்பார்க்கிறேன். என்று, அவ்வறிவுகளைத் துணைகொண்டு, நோயும்—துயரும் நீடித்து நிலைத்திருப்பதை மறுத்தொதுக்க முன்வருவார்களோ, தோல்விகள் நிரம்பியிருப்பதை மறுத்தொதுக்க முன்வருவார்களோ, அந்த நாளைத்தான் நான் ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.

அந்தக்காலம் வரும்பொழுது, சிறைக்கூடத்தின் சுவர்கள் கீழே விழும்; இருட்டறைகள் ஒளியால் விளங்கும்; உலகை வெறுத்துவரும் தூக்குமரத்தின் நிழல் மறையும்! அந்தக்காலம் வரும்பொழுது, வறுமையும் குற்றமும் குழந்தையற்றவைகளாகும்! அந்தக்காலம் வரும்பொழுது, தேவைக்காகத் துடித்திடும் கைகள், 'நைவேத்தியம்' வாங்குகைகளை நீட்டா; அவைகள் புழுதியாகக் கருதப்படும்! அந்தக்காலம் வரும்போது, உலகம் முழுவதும் அறிவின் மயமாகும்; நன்மையின் மயமாகும்; விடுதலை மயமாகும்!

மதம் ஒருபொழுதும் மனித சமுதாயத்தைச் சீர்திருத்தாது; ஏனெனில், மதம் அடிமைத்தனம் கொண்டிருப்பது ஆகும்!

மதத்தொடர்பற்ற விடுதலை வாழ்வு வாழ்வதும், அச்சத்தின் கட்டுக்களையும் கோட்டைகளையும் விட்டு விலகுவதும், நேராக நிமிர்ந்து நின்று எதிர்காலத்தைப் புன்னகையோடு வரவேற்பதும் எவ்வளவோ மேன்மையானவையாகும்!

சில வேளைகளில் உல்லாச வாழ்வுக்கு உன்னை ஒப்படைப்பதும், கடலலையிலே மூழ்கி எழுவதும், உலகின் கண்மூடித்தனமான ஆற்றலில் நீ திளைத்திருப்பதும், சிந்திப்பதும், கனவு காணுவதும், வாழ்க்கையின் தொடர்ச்சியையும் அதிலுள்ள கட்டு திட்டங்களையும் மறப்பதும், கவலை தரும் நோக்கத்தையும் குறிக்கோளையும் மறப்பதும், மூளையின் கற்பனை ஓவியங்களிலே திளைத்து நிற்பதும், இறந்தகால அணைப்புகளையும் முத்தங்களையும் மீண்டும் ஒருமுறை நினைப்பதும், வாழ்க்கையின் ஆரம்ப நிலையை மீண்டும் கொண்டுவருவதும், இறந்துபோனவர்களுடைய உருவங்களையும், முகங்களையும் மீண்டும் ஒருமுறை பார்ப்பதும், வருங்காலத்திற்காகும்படியான ஓவியப் படங்களை வரைவதும், எல்லாக்கடவுள்களையும் மறப்பதும், அவர்களுடைய உறுதிமொழிகளையும் அச்சுறுத்தல்களையும் மறப்பதும், வாழ்க்கையின் மகிழ்ச்சிக் கட்டங்களை நீயே உள்ளுக்குள் நினைந்து மகிழ்வதும், போர்ப்படையின் ஓசைமுழக்கத்தைக்

வாழ்வும் வளமும்

தொழில்கள்

பருத்தி-கம்பளி ஆடைகள் நெய்தல், செப்பு—வெண்கலவேலைகள் செய்தல், கண்ணாடி—மட்பாண்டம் பண்ணுதல் போன்றவைகள் முக்கியமான கைத்தொழில்களாகக் கொள்ளப்பட்டன. உழவுத் தொழிலிலும், தோட்டப் பயிர்த் தொழிலிலும் மிகத் திறமை படைத்தவர்களாக விளங்கினார்கள் எகிப்தியர்கள்.

வாணிகம்

எகிப்தின் வாணிகம் எங்கும் பரந்து புகழ் பெற்றதாக இருந்தது. தங்கம், தந்தம், தோல்கள் எதியோப்பியாவிலிருந்து கொண்டுவரப் பட்டன; அடிமைகளும் அங்கிருந்து கொண்டுவரப்பட்டனர். அரேபியாவிலிருந்து மதுவகைகள் இறக்குமதி செய்யப்பட்டன. திராவிடத்திலிருந்து வாசனைப் பொருள்கள் வந்தன. இந்தப் பொருள்களுக்குப் பண்டமாற்றாக, உணவுப்பொருள், துணிவகைகள் ஆகியவற்றைச் சிறப்பாக ஏற்றுமதி செய்தது. கப்பல் வாணிகம் கிரேக்க—பொனீஷிய வியாபாரிகளாலே நடத்தப்பட்டது. எகிப்திய மக்கள் கப்பல் கட்டுதல், கப்பல் ஓட்டுதல் போன்றவைகளில் திறமையற்றவர்களாக இருந்ததால், பிறநாட்டு வாணிகர்கள் கடல் வாணிகத்தை நடத்தினர்.

கவின்கலைகள்

பண்டைக்கால எகிப்தியர்கள் கவின்கலைகளில் மிகவும் வல்லவர்களாக விளங்கினர். அவர்களுடைய கலைகள் சமயக்கருத்துக்களையும், கடவுள்கதைகளையும் அடிப்படையாகக் கொண்டே வளர்க்கப்பட்டன. அவர்களுடைய சிற்பக்கலைகளில் எளிமையும், மென்மையும் இருப்பதில்லை: ஆனால் அவைகள் கம்பீரமாகவும், அழகாகவும் இருக்கும். சமயக் கொள்கைகளுக்கே முழுக்க முழுக்கக் கட்டுப்பட்டு நடந்ததால், கலை மேலோங்கி வளர்வதற்கு இடமில்லாமற் போயிற்று. பெரிய பெரிய

கேட்பதும், அச்சமற்ற உன்னுடைய இதயத் துடிப்புகளை நீ கேட்பதும் எவ்வளவோ மேன்மையானவைகளாகும்!

மேலும், நல்ல பயனுள்ள செயல்களை நீ செய்யவும், உன்னுடைய மூளையிலுள்ள கொள்கைக்கு ஏற்ப எண்ணத்தையும் செயலையும் நீ அடையவும், பொதுப் பொருள்கள் என்னும் பூக்களில், கலைத் தேனைப் பருக, தேனீயைப் போல் பறந்து செல்லவும், உண்மைகளைப் பயிற்சிபெற்ற—நிலையான கண்களால் பார்த்தறியவும், வெகு தொலைவில் கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாதவைகளை இப்பொழுதுள்ளவைகளோடு, முடிபோடும், மெல்லிய நைந்துபோன கயிறுகளைக் கண்டறியவும், அறிவினைப் பெருக்கிக்கொள்ளவும், வலிவற்றவர்களின் தாங்கமுடியாத சுமைகளை அகற்றவும், மூளையை வளப்படுத்தவும், நேர்மைக்குப் பரிந்துபேசவும், உயிருணர்ச்சிக்கு ஒரு அரண்மனை அமைக்கவும், நீ வீறிட்டு எழுவது, எவ்வளவோ மேன்மை பயப்பதாகும்!

இதுதான் உண்மையான 'மதம்'; இதுதான் உண்மையான 'வழிபாடு'!

[இத்துடன் வந்த நான்கு கட்டுரைகளும் அமெரிக்காவில் வாழ்ந்த பகுத்தறிவுப் பேரறிஞரான ராபர்ட் கிரீன் இங்கர்சால் ஆற்றிய கடைசி சொற்பொழிவாகும். இதற்குப் பிறகு அவர் சொற்பொழிவே ஆற்றவில்லை; இறப்பு அவரை அணைத்துக்கொண்டுவிட்டது. இந்தச்சொற்பொழிவை, அவர், 1899-ம் ஆண்டு ஜூன் திங்கள் 22-ம் நாள், போஸ்டன் நகரில், ஹாலீஸ் ஸ்டிரீட் தியேட்டரில், 'அமெரிக்க சுதந்திர மதச் சங்கத்'தின் சார்பில் ஆற்றினர்.]

சிலைகள், கடவுட் பதுமைகள், விசித்திரமான பிராணிகள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டும், கட்டப்பட்டும் வியப்புக்குரியனவாக விளங்கின. கோயில்களும், கல்லறைகளும் பல்வேறு ஓவியங்களால் அழகுபடுத்தப்பட்டன. ஓவியங்கள் அனைத்தும் கற்பனை செய்யப்பட்டனவாகவே யிருந்தன. வண்ணங்கள் எப்பொழுதும் நிலைத்து நிற்கக்கூடியனவாகவும், பளபளப்பு மிக்கனவாகவும் இருந்தன. இசை நேர்த்தியாகவும், இனிமையாகவும் வளர்க்கப்பட்டது. எகிப்தியர்கள் பல்வேறு விதமான இன்னிசைக் கருவிகளைக் கண்டுபிடித்திருந்தனர். நடனக்கலையிலும் பண்டை எகிப்தியர்கள் சிறந்து விளங்கினர்.

கட்டிடக்கலை எகிப்திய கலைகளில் மிக உயர்ந்த நிலையை எய்திருந்தது. பொருத்த அளவும், கம்பீரத் தோற்றமும் அதன் முக்கிய கூறுபாடுகளாகும். பருத்து

கட்டிடக்கலை

அகன்று உயர்ந்த பிரமிட் கோபுரங்கள், நீண்டு வளர்ந்த சதுரக் கற்கம்பங்கள், சாலப் பெரிய தூண்கள், நனி விரிந்த மண்டபங்கள் ஆகியவற்றோடு கூடிய மிகப் பெரிய கோயில்கள், பெரிய பெரிய உருவச் சிலைகள், ஸ்பிங்ஸ்களின் வரிசைப்பாடுகள், மிகப் பலவான பதுமைகள், பல்வேறு வகைப்பட்ட சிற்பங்கள் ஆகியவைகளைக் கட்டி மகிழ்வதிலே தனி ஆர்வங் காட்டினர், எகிப்தின் பழங்கால மக்கள்.

சதுரக்கம்பம் எனப்படுவது, ஒரே கல்லில் அடிக்கப்பட்டு, நான்கு பட்டை வடிவில் நீண்டு, நுனியில் பிரமிட் வடிவாக அமைந்திருப்பதாகும். அவைகள் ஒவ்வொரு கோயில் வாயிலின் இருபுறங்களிலும் இரண்டு இரண்டாக நாட்டப்பட்டிருந்தன. அவைகள் இருபது அடியிலிருந்து, நூற்றியிருபத்து மூன்று அடி வரையிலும் வேறுபட்டுக் காணப்பட்டன. அந்தக் கற்கம்பங்கள் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள மலைகளில் செதுக்கி எடுக்கப்பட்டு, நைல் நதியில் மிதக்கவிடப்பட்ட கட்டுமரங்களின்மீது ஏற்றப்பட்டு, பல பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்பட்டன. எந்த அரசனால் அவைகள் நாட்டப்பட்டனவோ, அந்த அரசனின் பெயரும், பெருமையும் அவற்றின் பக்கங்களில் செதுக்கப்பட்டன. ஞாயிற்றுக் கடவுள் கோயிலின்முன் நாட்டப்பட்டிருந்த கம்பங்களில் ஒன்று, அண்மையில், நியூயார்க் நகருக்கு எடுத்துச்செல்லப்பட்டு, அங்கே பூங்காவொன்றில் அழகுக்காக நிலைநிறுத்தப்பட்டது. அந்தக் கம்பம் முதலில் உரோமானியர்களால், அகஸ்டஸ் காலத்தில் அகற்றப்பட்டு, அலெக்ஸாண்டிரியா நகரில் நடப்பட்டது. அதனோடு சேர்ந்த மற்றொரு கம்பமும் அரசி கிளியோபாட்ரா காலத்தில், அலெக்ஸாண்டிரியாவுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டது. லண்டன் நகருக்கும், பாரிஸ் நகருக்கும்கூட ஒவ்வொரு கம்பம் எடுத்துச் செல்லப்பட்டது. நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே பல கம்பங்கள் ரோம் நகரம் போய்ச் சேர்ந்தன.

எகிப்தியர் கட்டிய வியப்புக்குரிய மிகப் பெரிய கட்டிடம் பிரமிட் கோபுரமேயாகும். நைல் நதிக்கரையில் சுமார் எழுபது மைல் நீளமுள்ள நிலத்தில் பரவிக்கிடக்கும் எழுபது பிரமிட்களிலே, மிகப்பெரியது, கிஜா என்ற இடத்தில் இருப்பதுதான். பிரமிட் கோபுரத்திற்கும், பிற கட்டிடங்களுக்குமான பெரும் பாராங்கற்களை நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து, ஆயிரக்கணக்கான மக்களின் உழைப்பினைப் பயன்படுத்திக், கொண்டுவந்து சேர்த்தனர். பெரிய பிரமிட் கோபுரம் 764 அடி சுற்றளவு கொண்டு, 13 ஏக்கர் நிலப்பரப்பில், 480 அடி உயரம் வளர்ந்திருந்தது. கெய்ரோவில் பிற்காலத்தில் முஸ்லிம்களால் கட்டப்பட்ட அரண்மனைகளுக்கும், மசூதிகளுக்கும், பிற கட்டிடங்களுக்கும் அதிலிருந்து கற்களைப் பெயர்த்து எடுத்துக்கொண்டு போய்விட்டதால், அது இப்பொழுது 30 அடி உயரம் குறைந்து காணப்படுகிறது. பிரமிட் கட்டிடத்தின் அமைப்பும், அதனுள் உள்ள அறைகளும், வழிகளும் அறிவியல் அறிவையும், கணித அறிவையும் அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டனவாகும். பெரிய பிரமிட் சியாப்ஸ் என்ற மன்னனால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதன் காலம் கி. மு. 2400 ஆக இருக்கக்கூடும் என்று வரலாற்று அறிஞர்கள் கருதுகிறார்கள். அது ஆரம்பத்தில் 70 லட்சம் டன் கற்களைக் கொண்டிருந்ததாகக் கணக்கிடப்படுகிறது. அதனை லட்சம் தொழிலாளர்கள் முப்பது ஆண்டுகளில் கட்டி முடித்தார்கள்.

சியாப்ஸ் பிரமிட்டுக்கு முன் சிறிது தொலைவில், ஸ்பிங்ஸ் ஒன்று நைல் நதியைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறது. இதனைப் பெரிய ஸ்பிங்ஸ் என்று அழைப்பர். ஸ்பிங்ஸ்

என்பது ஒரு கற்பனை விலங்கின் சிலையாகும். மனிதனுடைய தலையையும், சிங்கத்தின் உடலையும் அது கொண்டிருக்கிறது. அது பெரிய பிரமிட்டுக்கும் காலத்தால் முந்தியது என்று அறுதியிடப்படுகிறது. அது 146 அடி நீண்டும், தோளிடத்தில் 36 அடி அகன்றும், இரண்டு பாதங்களுக்கிடையில் 50 அடி அகன்றும் படுத்தத் தோற்றத்திலிருக்கிறது. எகிப்தியக் கடவுள்களிலே ஹோரஸ் என்ற ஞாயிற்றுக் கடவுளின் தோற்றமே அது என்று அறியப்படுகிறது.

அறிவியல்

பண்டைக்கால எகிப்திய மக்கள் அறிவியல் துறையிலும் சிறந்து மேம்பாடுற்று விளங்கினர். அவர்கள் பழக்கத்தில் கொண்டிருந்த காலக் கணக்கீடும், பிற வானிலை ஆராய்ச்சிகளும், அவர்களுக்கிருந்த நிரம்பிய வான நூலறிவைத் தெளிவுபடுத்துகின்றன. பல்வேறு வகையான கட்டிடங்களைக் காணும்போது, அவர்களின் கணித நூலறிவும், பொறியியலறிவும் புலனாகின்றன. மருந்துவகைகளைத் தயாரித்தலிலும், மருத்துவ சிகிச்சை செய்வதிலும் அவர்கள் மிக்கத் திறங்காட்டி விளங்கினர். பானை பண்ணுதல், கண்ணாடிச் சாமான், பிங்கான் சாமான் உற்பத்திச் செய்தல், கம்பளி எடுத்தல், சாயம் போடுதல் போன்ற நுண் தொழில்களிலும் அவர்கள் சிறந்து விளங்கினர். உயர்வகை மணிக்கற்களிலும், உலோக வகைகளிலும் இழைப்பு வேலைகள் செய்தல், உருவங்கள் செதுக்குதல் போன்ற நுண்கலைத் தொழில்களிலும் சிறப்புற்றுத் திகழ்ந்தனர்.

மொழி

மேல் கீழ் எகிப்துகளில், தம்மில் சிறிது வேறுபாடு கொண்ட மொழிகள், வழக்கிலிருந்துவந்தன. அவர்கள் மொழியின் வரிவடிவம், படங்களால் சித்தரித்துக் காட்டப்படுவதாகும். கற்கம்பங்களிலும், கற்பாறைகளிலும், கோயில் சுவர்களிலும் சித்திர வடிவ மொழியையே தீட்டினர். பாப்பிரஸ் என்ற மரத்துப் பட்டையில் மைகொண்டு எழுதினர். பிற எழுத்துக்கள் எல்லாம் கறுப்புமையாலும், பத்தியின் ஆரம்பம் சிவப்பு மையாலும் எழுதப்பட்டன. பாறைகளில் செதுக்கப்பட்ட எழுத்துக்களும், பல வண்ணங்களால் தீட்டிக் காட்டப்பட்டன.

இலக்கியம்

சிதைந்தும், குறைந்தும் போன பல இலக்கியங்கள் இப்பொழுதும் காணக்கிடக்கின்றன. அவைகள் ஒன்றுக்கொன்று தொடர்பு தெரியாமலும், சில இன்னதென்று புரியாமலும் இருக்கின்றன. சிலவற்றிலிருந்தே சிற்சில குறிப்புகளைத் தெரிந்துகொண்டு, பண்டை எகிப்தியரின் வாழ்க்கையை ஒருவாறு கணிக்க முடிகிறது.

வாழ்க்கை

கல்லறைகளிலும், பிற நினைவுக்குறிகளிலும் எழுதப்பட்டிருக்கும் ஓவியப் படங்களைக் கொண்டு, எகிப்திய மக்களின் அன்றாட வாழ்க்கை முறையைக் குறிப்பாகத் தெரிந்துகொள்ள இயலுகிறது. பணக்காரர்கள் அடிக்கடி பெரும் விருந்துகள் ஏற்பாடுசெய்து, விருந்து வைக்கும் கணவனும் மனைவியும் அவைகளுக்குத் தலைமை வகித்து நடத்துவார்கள். விருந்தில் வந்து உட்கார்ந்திருக்கும் விருந்தாளிகள்மீது, பணியாளர்கள் தாமரை மலரின் இதழ்களை வாரித் தூவுவார்கள். ஒவ்வொருவருக்கும் முன் போடப்பட்டிருக்கும் சிறிய மேஜையில் ஊன் வகைகள், பழங்கள், ரொட்டிகள், சோறு, காய்கறிகள் பரிமாறப்படும். தாயம், சதுரங்கம் முதலிய பலவேறு விளையாட்டுகளையும் கொண்டிருந்தனர். பெண்கள் மிக மரியாதையுடனும், பெருமையோடும் போற்றப்பட்டார்கள்.

பண்டைக்கால எகிப்தின் வரலாறு, கி. மு. 2700-இல் இருந்துதான் சிறுசிறு குறிப்புகளால் அறியப்படுகின்றது. கி. மு. 2700-இல் இருந்து கி. பி. முதல் நூற்றாண்டுவரையிலும் உள்ள காலத்தைத்தான், பண்டைக்கால எகிப்து என்று அழைக்கிறோம். அதற்குப் பிறகு அது கிரேக்க உரோம அராபியர்களின் படையெடுப்புகளுக்கு ஆளாகி, சீர் சிறப்பு, அறிவு ஆற்றல், எழில் அழகு, வளம் வாணிகம் எல்லாம் இழந்து 'விதவைக்' கோலம் பூண்டது. என்றாலும், வளர்ந்தோங்கியிருந்த எகிப்தின் பண்டைக்காலச் சிறப்புகளை, ஏக்கத்தோடு, தம் அழிந்த நிலையில் தெரிவிப்பன போல, பிரமிட்களும் ஸ்பிங்ஸ்களும், கற்றூண்களும் கோபுரங்களும், மண்டபங்களும் மாளிகைகளும், பதுமைகளும் பாண்டங்களும் காட்சியளிக்கின்றன! வற்றாத நீரோட்டமுள்ள நைல் நதி வாரியிறைத்த வெண்மணற் பரப்பில், கொடும் வெய்யலில் காய்ந்து, பால் வெண்ணிலவில் குளிர்ந்து, ஆடாது அசையாது, அஞ்சாது அயராது அப்படியே நின்றவண்ணமிருக்கின்றன! அவற்றைப் பார்க்கிறோம்; உள்ளம் விரிகிறது; வியப்பு குடிகொள்கிறது; உவகை வழிந்தோடுகிறது!

கிளியோபாவின் காதலன்

[இரா. செழியன்]

தோட்டத்தில் 'கிளியோபாட்ரா' தோன்றிப், பின் மறைந்ததும், டாக்டர் சம்பந்தமும், சுந்தரமூர்த்தி பிள்ளையும் அவள் யாராயிருக்கக்கூடும் என்பதை அறிவதில் ஈடுபட்டிருந்தனர். துப்பறியும் நாவல்களில் வருவதைப் போல, அவர்களால் விளக்கமுடியாத புதிராக அது இருந்தது. மாசிலாமணியைக் கேட்டால் தெரிந்துகொள்ளமுடியும். அதுவும் அவன் நல்ல நிலைமையிலிருந்தால். அவனோ 'ஆண்டனி'யாக உலவிக்கொண்டிருக்கிறான். அவனைக் கேட்டால், 'கிளியோபாட்ரா'வைப் பற்றிச் சரியான தகவல் கிடைக்காது.

"நீண்ட நாட்களாக இந்தக் காதல் நடைபெற்றிருக்கவேண்டும். ஒருவேளை அந்தக் காதல் கூடாததினாலேயே, மாசிலாமணிக்குச் சித்தப்பிரமை உண்டாகியிருக்கக்கூடும். சித்தப்பிரமை உண்டானபின்னும், தற்செயலாக அவளை அவன் சந்தித்தபொழுது, பழைய ஞாபகத்துடனோ, அல்லது இரண்டும் கலந்த நிலையிலோ அவளுடன் அவன் பேசியிருக்கிறான். எதற்கும் அவளை யிழந்துவிட்டோமென்ற நினைவு, மாசிலாமணிக்குக் கலக்கத்தைத்தான் கொடுத்திருக்கிறது. முதலிலேயே நமக்கு இந்த யோசனை வராமற்போயிற்று. 'ஆண்டனி—கிளியோபாட்ரா' நாடகத்தில் கிளியோபாட்ரா இல்லாமலேயே நாடகத்தை நடத்திவிட முடியுமா? எப்படியாவது அந்தப் பெண்ணைக் கண்டுபிடிக்க வேண்டும்!" என்று டாக்டர் சம்பந்தம் கூறினார்.

ஆனால் அப்படி மாயமாய் மறைந்த பெண்ணை எப்படிக் கண்டுபிடிப்பது என்பதுதான் புரியாமலிருந்தது. நாங்கள் மூவரும் உட்கார்ந்து பலவகைகளை யோசித்தபொழுதும்—போலீசில் சொல்வது, பத்திரிக்கைகளில் போடுவது எதுவும் சரியானதாகத் தெரியவில்லை. "மாயமாய் மறைந்த பெண் மீண்டும் வரக்கூடும்" என்ற நம்பிக்கையில், தோட்டத்தில் ஒரு வேலைக்காரனைக் காவல்போட்டு, யாராவது பெண் வெளியிலிருந்து உள்வந்தால் பார்த்துச் சொல்லும்படி உத்தரவிட்டிருந்தார்.

தோட்டத்தில் அந்தப் பெண் மறைந்துபோன சம்பவத்துக்குப்பின் இரண்டுநாள் கழித்து மாசிலாமணியை நான் பார்த்தபொழுது—அப்பொழுதும் நான் ஒரு ரோம் நாட்டுக் கிழவனைப்போல உடையணிந்து சென்றேன், 'ஆண்டனி' வழக்கம்போல் அங்கு மிங்கும் உலவிக்கொண்டிருந்தான். நான் உள்ளே போய் "ஹெயில் ஆண்டனி" என்று கூவியதும், தன் யோசனையிலிருந்து விழித்துப் பார்த்து, ஆச்சரியத்துடன் என்னை உறுத்துப் பார்த்தான். நான் போட்டுக்கொண்ட வேஷத்தில்தான் ஏதாவது பிசகு இருக்கிறதாவென்று சரிப்படுத்திக்கொண்டு, பேச்சுக்கொடுத்தேன். 'ஆண்டனி' உற்சாகமெதுவும் காட்டாமல், உலவியபடி இருந்தான். அடிக்கடி அவன் ஜன்னலருகே நின்றபடி, தோட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். வேறு எதற்காக இருக்க முடியும்? மறைந்துபோன பெண் மீண்டும் வருகிறாளா என்பதைப் பார்க்கத்தான்!

அதற்கப்புறம் நாலைந்து நாட்கள் சுந்தரமூர்த்தி வீட்டுக்கு நான் போக முடியவில்லை, வேறு வேலைகளிருந்ததால். அதனால் ஒரு நாள் மாலை நான் அந்தப்பக்கம் வரும்பொழுது—அப்பொழுது என்னுடைய நண்பரொருவரின் மகள் வசந்தா, அவளையும் அழைத்துக் கொண்டு வந்திருந்தேன்—உள்ளே போய்விட்டுப் போகலாமென நினைத்தேன். வசந்தா என்னுடன் வராமல் தயங்கிக்கொண்டு நின்றாள்.

"இந்த வீட்டில்தான் அந்தப் பையன்—சற்றுமுன் ஒருவனுக்குச் சித்தப்பிரமையாகி, ரோம் வீரனைப்போல வேஷம் போட்டிருக்

கிறேனென்று சொன்னேனே—அவள் இருக்கிறாள்."

"ஓ! அப்படியா!" என்று அவள் ஆச்சரியமடைந்தாள்.

"நீ இப்படித் தோட்டத்திலேயே உட்கார்ந்திரு! நான் உடனே வந்துவிடுகிறேன்" என்று உள்ளே போய் சுந்தரமூர்த்தியிடம், அவருடைய பிள்ளையின் நிலையைப் பற்றி விசாரித்துக்கொண்டிருந்தேன். அதற்குள் டாக்டர் மிக பரபரப்புடன் உள் நுழைந்தார். "மறைந்துபோன பெண் மீண்டும் தோட்டத்துக்குள் வந்திருக்கிறாள்!" என்று சொன்னார். ஒரு வெடிகுண்டை எங்கள்முன் வீசியிருந்தால்கூட, அது அவ்வளவு அதிர்ச்சியைத் தந்திருக்காது! நாங்கள் வெளியில் வந்து தோட்டத்திற்குள் பார்த்தோம். என்னால் யாரையும் புதிதாகப் பார்க்க முடியவில்லை.

"எங்கே?"

"அதோ! மரத்தடியில்!"

எனக்குச் சிரிப்புதான் வந்தது. டாக்டர் சுட்டிக்காட்டியது வேறு யாரையுமல்ல, என்னுடன் வந்து, தோட்டத்தினுள் உலவிக்கொண்டிருந்த வசந்தாவைத்தான்!

"அந்தப் பெண்ணை நான்தான் அழைத்துக்கொண்டுவந்தேன். பெயர் வசந்தா!"

"உங்களுடைய சாமர்த்தியமே சாமர்த்தியம்! எப்படிக் கண்டுபிடித்து இங்கே அழைத்துவந்தீர்கள்?" என்று சுந்தரமூர்த்தியும் என்னைப் பாராட்டத்தொடங்கினர். இதே தடா இவர்களுக்கும் ஏதாவது பைத்தியம் பிடித்துவிட்டதோவென்று எனக்குத் தோன்றியது.

"இவள் என்னுடைய நண்பரின் மகள். இவள் ஒன்றுமே தெரியாதவள். தோட்டத்திலே தோன்றி, மறைந்துபோன பெண்ணுடைய சாயல் இவளுக்கு இருப்பதாக தோன்றினாலும்—எனக்குக் கொஞ்சங்கூட அப்படிப் படவில்லை—வசந்தா அந்தப்பெண்ணாக இருந்திருக்கமுடியாது" என்று நான் சொன்னேன்.

"என் கண்களைக் குருடு என்று சொன்னாலும் சரி, அன்றைக்கு வந்த பெண்ணேதான் இவள்!" என்று டாக்டர் திட்டவட்டமாகச் சொன்னார். "பாருங்கள்! அன்று அவள் உட்கார்ந்திருந்த மரத்தடியிலேயே இன்றும் நின்று பார்க்கிறாள்! நிச்சயம் அந்தப் பெண்தான் இவள்!"

என்னால் கொஞ்சங்கூட நம்பமுடியவில்லை. வசந்தாவா அன்று 'ஆண்டனி'யுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு மறைந்து விட்டவள். இருக்கவே முடியாது! சற்றுமுன்கூட, இப்படி ஒரு 'ஆண்டனி' இருக்கிறானென்பதைப்பற்றி நான்தான் அவளுக்குக் கதை சொல்லவேண்டியிருந்தது.

"நீங்கள் சொல்வது உண்மையென்றால், நானே அவளைக் கேட்டுவிடுகிறேன்!" என்று நான் கிளம்பினேன்.

"அவள் இல்லையென்று சொல்லிவிட்டால்—ஒன்றும் கேட்கவேண்டாம். எதும் தெரியாதது மாதிரி பேசாமல் இருந்துவிடலாம்." என்று இருவரும் தடுத்தனர்.

நாங்கள் மூவரும் வெளியில் நிற்பதைப் பார்த்ததும்,வசந்தா எங்களை நோக்கித் திரும்பி வந்தாள். அவளைச் சுந்தரமூர்த்திக்கும், டாக்டர் சம்பந்தத்திற்கும் அறிமுகப்படுத்தினேன். சுந்தரமூர்த்தி உள்ளே வரும்படி அழைத்து, சிற்றுண்டி வழங்கச் செய்தார். அப்பொழுதெல்லாம் வசந்தாவிடம், பரபரப்பையோ, ஆவலையோ காணமுடியவில்லை. பேசும்பொழுதும், முன் ஹாலில் வைக்கப்பட்டிருந்த பல வகை ரோம் நாட்டு ஆயுதங்கள், உடைகளையும் பார்க்கும்பொழுதும் முதல் தடவை கேள்விப்படுபவள்போல்தான் இருந்தாள். அதற்குமுன் நானே இரண்டொருமுறை மாசிலாமணிக்கு நேர்ந்துள்ள நிலைபற்றிச் சொல்லியிருக்கிறேன். ஆனால் அவற்றைப் பற்றியெல்லாம் முழுவதும் மறந்துவிட்டவள்போல, முன்பு எதுவும் கேள்விப்படாதவள்போல, வசந்தா டாக்டரிடம் பேசிக்கொண்டிருந்தாள். சுந்தரமூர்த்தி வீட்டினுள் போயிருந்தார் வேறு வேலையாக. நான் மட்டும் உட்கார்ந்து பத்திரிக்கையொன்றைப் புரட்டிக்கொண்டிருந்தேன்.

"இந்தமாதிரி மனநிலை மாறியிருப்பவர்களுக்குச் சீக்கிரம் குணம் தெரிவதில்லையா?" என்று வசந்தா கேட்டாள்.

"ஆகிவிடும். ஆனால் மாசிலாமணி முன்னைவிட அதிக மனவதிர்ச்சி அடைந்திருக்கிறானென்று தெரிகிறது. நான் உள்ளே போய்

பார்த்துவிட்டு வருகிறேன். யார் என்னுடன் வருவது?" என்று டாக்டர் கேட்டார்.

"நான் வருகிறேன். வசந்தா! நீ அதுவரையில் இங்கேயே யிருக்கிறாயா? ஏன், நீயுந்தான் உள்ளே வருவதுதானே!" என்று அவளையும் கூப்பிட்டேன்.

வசந்தா மிகவும் ஆச்சரியமடைந்தவளாய் எழுந்து நின்றாள். ஆனாலும் நான் கூப்பிட்டதை அவள் எதிர்பார்த்தவள்போலத்தான் காணப்பட்டாள்.

"நானா? நான் எப்படி உள்ளே வர முடியும்?"

"அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். இதோ! இந்தப் பட்டுச் சால்வையைப் போர்த்துக்கொண்டு, சிறு கிரீடத்தை வைத்துக் கொண்டால் போதும்!" என்று டாக்டர் ஒரு பட்டுச் சால்வையையும், சிறு கிரீடத்தையும் கொடுத்தார். வசந்தா தயக்கத்துடன்தான் வாங்கி வைத்தாள்.

"முதலில் நான் உள்ளே போய் பார்த்துக் கொள்ளுகிறேன். பின்னர் நீங்களிருவரும் வாருங்கள். நீங்கள் என்ன பெயரில் வருவது? உம்." என்று டாக்டர் சிறிதுநேரம் யோசித்துப் பார்ப்பதுபோல் நின்றார். "சரி! ஏதாவது ஒரு பெயர் சொல்லிக்கொள்ள வேண்டும். எகிப்து நாட்டு அரசி கிளியோப்பாட்ரா என்றால் போகிறது. சீக்கிரம் புறப்படுங்கள், நான் போகிறேன்" என்று டாக்டர் தன்னுடைகளை மாற்றிக்கொள்ளப் போனார்.

தனக்குத் தரப்பட்ட பெயரைக் கேள்விப்பட்டதும், வசந்தா "இல்லை, நான் வரவில்லை" என்று மறுத்துவிட்டாள்.

"இதிலென்ன பயம். நானும் வரப்போகிறேன். பேசாமல் வா! வேடிக்கைபோலப் பார்த்துவிட்டுப் போய்விடலாம்!" என்று நான் அவளைச் சமாதானப்படுத்தினேன்.

நான் முதலில், மாசிலாமணி இருக்குமிடத்துக்குச் சென்றேன். மாசிலாமணி ஜன்னலோரத்தில் நின்றுகொண்டிருந்தான். அவனுடைய பார்வை தூரத்தில்—வானத்தில் மிதந்துகொண்டிருக்கும் ஏதோ ஒன்றைத் தேடிப் பிடிப்பதுபோல ஆழ்ந்திருந்தது. அவனுக்குப் பின்னால் டாக்டர் நின்றுகொண்டிருந்தார். சற்று தூரத்தில் சுந்தரமூர்த்தி உட்கார்ந்து, ஓலைச்சுவடியொன்றைப் புரட்டிக் கொண்டிருந்தார். நான் உள்ளே நுழைந்ததும், கனைத்துக்கொண்டு, "ஹயில், ஆண்டனி!" என்று வழக்கம்போலக் கூவினேன். ஆண்டனி திரும்பிப் பார்க்காமல் அலட்சியமாக இருந்தான். நான் சற்றுமுன் வந்து "எகிப்து நாட்டு அரசி, கிளியோபாட்ரா வருகிறாள்" என்று உரத்துக் கூவினேன். திடுக்கிட்டுத் திரும்பியவனாய், ஆண்டனி என்னைச் சுட்டெரித்துவிடுபவன்போல் உற்றுப் பார்த்தான். மிகுந்த கோபத்துடன் என்னை நோக்கி வந்தான். அதற்குள் கதவு திறந்து மூடும் சத்தம் கேட்டது. வசந்தா அங்கு நின்றுகொண்டிருந்தாள். பட்டுத்துணியைப் போர்த்திக்கொண்டு, முடியில் சிறு கிரீடம் அணிந்திருந்தாள். ஒரு அரசியினுடைய பார்வையும், கெம்பீரமும் அவளுடைய முகத்தில் விளங்கின.

அவளைப் பார்த்ததும், ஆண்டனி மிகவும் ஆச்சரியமுற்றவனாய்த் திகைத்து நின்றான். வசந்தாவும் ஏதும்பேசாமல் இருந்தாள். சிறிது நேரம் அறையில் அமைதி நிலவியது. வசந்தாவின் அருகே ஆண்டனி வந்து, அவளை உற்றுப் பார்த்தபடி சிறிதுநேரம் நின்றான். பின் திடீரென்று, "நீ யார்?" என்று அவளைக் கேட்டான்.

நான் இடைமறுத்து "கிளியோபாட்ரா, எகிப்து நாட்டு அரசி" என்று சொன்னேன். நான் சொன்னதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல், ஆண்டனி மீண்டும் வசந்தாவைப் பார்த்து "நீ யார்?" என்று கேட்டான்.

வசந்தா சற்றுப் பயந்து போய்விட்டாள். பின் 'நான்தான் கிளியோபாட்ரா' என்று தட்டுத் தடுமாறிச் சொன்னாள்.

அவள் சொன்ன பதிலில் ஆண்டனி திருப்தியடைந்ததாகத் தெரியவில்லை. அவளிடமிருந்து விலகித் தூரப்போய் நின்றுகொண்டு வசந்தாவையே உற்றுப் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான்.

மற்றும் நின்ற மூவரும் அரசியை வரவேற்று உபசரிப்பதுபோல, பேச்சை மாற்றினோம். வசந்தாவை அழைத்துப்போய் மத்தியிலிருந்த பட்டுக் கம்பளம் விரிக்கப்பட்ட இருக்கையில் உட்காரவைத்தோம். நாங்கள் செய்ததையெல்

லாம் மிக மகிழ்ச்சியுடன் வேடிக்கை பார்ப்ப வன்போல ஆண்டனி நின்றுகொண்டிருந்தான்.

நாங்கள் சிறிது விலகியதும், அவன் வசந்தா வின் அருகில் வந்து நின்று, அவளிடம் ஏதோ கேட்டான். சற்று தூரத்தில் நான் நின்றதால் அவர்கள் பேசிக்கொண்டது என் காதில் விழ வில்லை. பின் திடீரென்று ஆண்டனியின் குரல் உயர்ந்தது, "நீ எங்கிருந்து வருகிறாய்?" என்று கோபத்துடன் கேட்டான். வசந்தா எழுந்து நின்று பின்னால் நகர்ந்தாள்.

நான் குறுக்கிட்டு "எகிப்து நாட்டிலிருந்து தான்" என்றேன் ஆண்டனியின் கோபப் பார்வை என்பக்கம் திரும்பியது, "நீ முதலில் வெளியே போ!" என்று உறுமினான். நான் கதவுக்குப் பக்கத்தில் போய்த் தயாராக நின்று கொண்டிருந்தேன், மறுமுறையும் உத்தரவு வந்தால் வெளியே போய்விடுவதென.

ஆண்டனி கோபத்துடன் அங்குமிங்கும் உல வினான். அவன் எதிர்பாராத விதத்தில் வேத னைப்பட்டிருக்கிறான் என்பதுமட்டும் தெரிந் தது. நேராக வசந்தாவின் பக்கத்தில் போய் நின்று "நீ ஏன் இங்கு வந்தாய்? உனக்கு இவர்கள் எவ்வளவு பணம் கொடுத்தார்கள், இவ்வாறு நடிக்க?" என்று அவள் தலையி லிருந்த கிரீடத்தைப் பிடித்து வீசி யெறிந்து, அவளைப் பிடித்து உலுக்கினான். "போ, வெளியே போ!" என்று அவளைத் தள்ளி விட்டுச், சுற்றிலும் பார்த்துப் "போங்கள் என் முன் யாரும் நிற்கவேண்டாம்!" என்று தன் முன்னிருந்த சாமான்களை உதைத்துத் தள்ளி விட்டு, முகத்தைக் கையால் பொத்திக் கொண்டவண்ணம் படுக்கையில் போய் விழுந்துவிட்டான். டாக்டரையும், சுந்தர மூர்த்தியையும் மட்டும் அங்கேயே விட்டுவிட்டு, நானும், வசந்தாவும் வெளிவந்தோம்.

உள்ளே நடந்தவைகள் நொடி நேரத்தில் நடந்தேறியதால், என்ன நடந்ததென்றே என் னால் சரிவரப் புரிந்துகொள்ள முடியவில்லை. திடீரென்று ஆண்டனிக்குக் கோபம் வந்து ஏன் எல்லாவற்றையும் உருட்டித் தள்ளினான்? 'கிளியோபாட்ரா' வேஷத்தில் வசந்தா வந்த தில் ஏதேனும் தவறு விளைந்துவிட்டதா? சரியான காரணம் தெரியாமலிருந்தது. நான் என்னைப் 'பழைய' மனிதனாக ஆக்கிக்கொண்டு வீட்டைவிட்டுக் கிளம்பினேன்.

திடீரென்று ஏற்பட்ட எதிர்பாராத சம்பவங் களால்—அந்தவகையில் நான்தான் தவறுசெய் தேன். வசந்தாவை அந்தத் தொல்லைகளுக்கு ஆளாக்கியிருக்கவேண்டியதில்லை—வசந்தா சிறிது அதிர்ச்சியடைந்திருந்தாள். அப் பொழுதுகூட, டாக்டரும், சுந்தரமூர்த்தியும் சொன்னதுபோல், வசந்தாதான் அன்று தோட்டத்திலிருந்து மறைந்தபெண் என்பதை என்னால் நம்பமுடியாமலிருந்தது. கடைசியாக அவளையே கேட்டேன், "நீ இதற்குமுன் அந்தப் பையனை—மாசிலாமணியைப் பார்த்த துண்டா?"

பேசாமல் நடந்து வந்துகொண்டிருந்த வசந்தா உடனே பதிலளிக்கவில்லை. அவ ளுடைய வீடு அருகே வந்ததும், பிரியும் பொழுது "இனிமேல் இதைப் பற்றி யெல் லாம் தயவு செய்து ஒன்றும் கேட்காதீர்கள்!" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

எனக்குக்கூட, ஏன் நமக்கு இவ்வளவு தொல்லைகள் என்று தோன்றியது. சுந்தர மூர்த்தி தெரிந்தவரென்றால் அதற்காக அங்கே போய் வேஷம் போட்டுக்கொண்டு உள்ளே போக, அந்த 'மகராஜன்' வேலையாளை விரட்டு வதுபோல விரட்டியடிக்க, நமக்கேன் இந்தப் பாடு எல்லாம் என்று நினைத்து. இனி அங்குப் போவதில்லை, போனாலும் வேஷம் மாற்றிக் கொண்டு உள்ளே போகாமல் வெளியிலிருந்த படியே வந்துவிடுவது என்று தீர்மானித்தேன்.

என் தீர்மானத்திலிருந்து நான் மாறவில்லை இரண்டு நாள் கழித்து, டாக்டர் சம்பந்தம் என்னை அங்கு வரும்படி அழைத்தபொழுது "அன்றைக்கு நாற்காலியைப் போட்டு உடைத் தான், இன்றைக்கு நமது மண்டையை உடைத் தாலும் உடைப்பான். நான் வரவில்லை" என்று மறுத்தேன்.

"இப்போது தொல்லையெதுவும் இருக்காது, வாருங்கள்!" என்றார் டாக்டர்.

"எப்படி?"

"நாடகக் கம்பெனியைக் கலைத்துவிட்டோம். இனிமேல் யாரும் வேஷம் போடவேண்டிய அவசியமில்லை!"

"ஏன்?"

தேள் கடுப்பும் காதல் துடிப்பும்

[இரா. நெடுஞ்செழியன்]

அவளோ பருவமடந்தை மங்கை; அவள் தாய் தந்தையர்க்கும் அவளைத் தன்னந்தனியே வெளியே அனுப்பிவைக்க மனமில்லை; என்றாலும், வேறு வழியில்லை; மோர் விற்றுவர அவள் தான் சென்று வரவேண்டியிருக்கிறது.

நாள்தோறும் தயிர்க்கூடையைத் தலையிலே சுமந்து, நகர்ப்புறஞ் சென்று, விற்றுவிட்டு வீடு திரும்பவேண்டியது அவளது வாடிக்கைத் தொழில். அவளது வீடு நகரைத் தள்ளி இடையர் சேரியில் இருக்கிறது. இடையர் சேரிக்கும், நகருக்கும் இடையில் சாலையும் சோலையும் உண்டு. அந்தச் சோலையில் நுழைந்து சாலைவழியே சென்றுதான் அவள் நகரை அடையவேண்டும்.

தயிர்க்கூடையை ஏந்தி, அவள் அசைந்தாடி நடந்து வருவது, சோலையில் ஆடிவரும் மயிலோ என எண்ணத் தோன்றும். அவ்வளவு சாயல் மிகுந்தவள்! அழகு அவளிடம் கொஞ்சி விளையாடுகிறது; பருவமணம் அவளிடம் சிறக்கக் கமழ்கிறது; அவள் காண்பார் உள்ளத்தைக் கவரும் வடிவழகியாய் உலாவிவருகிறாள். அவள் நடமாட்டம் சோலைக்கே ஒரு தனி அழகைக் கொடுக்கிறது.

வழக்கம்போல் அவள் தயிர்க்கூடையை ஏந்தி வந்துகொண்டிருக்கிறாள். மாட்டு மந்தையை ஓட்டிக்கொண்டுவரும் இடையன் எதிர்ப்படுகிறான். காணாத ஒன்றைக் காண்பவன்போல அப்படியே அசைவற்று நிற்கிறான். அந்த அழகி அசைந்து அசைந்து வந்து, சாலை வழியே சென்றுகொண்டிருக்கிறாள். அவள்மேல் வைத்த விழியை எடுக்காமல், அவள் சென்று மறையும் வரையில், அவளை இமைகொட்டாமல் அப்படியே பார்த்துக்கொண்டே இருக்கிறான். அவள் உருவத்தோற்றத்தை உள்ளத்தில் வாங்கிக்கொள்கிறான். அதனை மனக்கண்ணால் கண்டுகளித்துக் கொண்டே இல்லம் செல்கிறான்.

உள்ளத்தில் ஏற்றிக்கொண்ட உருவத்தின் உண்மைத் தோற்றத்தைக் காண, மறுநாள், அதே இடத்திற்கு, அதே நேரத்திற்கு அவ்விளைஞன் வருகிறான். சோலை மயிலும் வருகிறாள். அவ்வாணழகன் கண்டு களிக்கிறான். காளையொருவன் வழியில் நின்று தன்னை வெறித்துப் பார்த்துக்கொண்டிருப்பதைக் கடைக்கண்ணால் கண்டுகொண்டு, ஏதும் அறியாதவள்போல் அவள் சென்றுகொண்டிருக்கிறாள். அவள் நடந்துவரும் அழகையும், தன்னைத் தாண்டி நடந்துபோகும் அழகையும் காணுகிறான்; காதலுணர்வு அவன் உள்ளத்தில் கசிகிறது. இப்படியாகச் சிலநாட்கள் உருண்டோடுகின்றன. ஒருவரை யொருவர் உள்ளத்தால் புரிந்து கொள்கிறார்கள். இருவரும் மற்

“வேஷம் போடாமலே, ஆண்டனியை இப்பொழுது பார்க்கலாம்.”

அவர் சொல்லியது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

“ஆமாம்! மாசிலாமணி பழைய உணர்வுடனே இருக்கிறான்!” என்று டாக்டர் சொன்னார்.

“எப்படி இப்படித் திடீரென்று அவனுடைய பித்து நீங்கி, நல்ல நிலைமையடைந்தான்?”

“அதுதான் வேடிக்கையாக யிருக்கிறது!”

(அடுத்த இதழில் முடிவுறும்)

றவரின் உருவோவியத்தைத் தங்கள் ங்கள் உள்ளத்தில் குடியேற்றிக்கொள்கிறார்கள்.

அவளோடு எப்படியாவது காதல்மொழி பேசி, அவளைக் கட்டியணைத்து முத்தமிட வேண்டும் என்று எண்ணங் கொள்கிறான். அதற்கிணங்க தன்னைத் தயாராக்கிக்கொள்வதற்கு, ஒரு நாள், துணிவை வரவழைத்துக் கொண்டு சாலையில் வந்து காத்திருக்கிறான். மோர்க் கூடையைத் தூக்கிக்கொண்டு அந்தப் பூங்கொடி வருகிறாள். அச்சமும் ஆவலும் அவனை ஆட்டிப்படைக்கின்றன. அவளும் அவ்விளையோனின் அழகைப் பருகிக் கொண்டே, நடந்துவந்து, நாணிக்கோணி, மெல்லடி யெடுத்துவைத்து நகர்ந்து செல்கிறாள். காதலன் மெதுவாகப் பின்சென்று அவளுடைய சடையைப்பிடித்து இழுக்கிறான். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு அத்துணையும் சேர்ந்து ஒருநொடியில் அவளுக்குத் திகைப்பைத் தருகிறது. அவள் தன் திகைப்பிலிருந்து மீளுவதற்குள், அவன் அவளைக் கட்டியணைத்துவிடுகிறான். அவளோ மெய்மறந்து, தன்னிலை மறந்து நிற்கிறாள். தலையிலிருந்த கூடையை அலுங்காமல் அப்படியே இறக்கிவைத்துவிட்டு, அவன் கையைப் பிடித்துச் சோலைப்பக்கம் இழுக்கிறான். அப்பொழுதுதான் அவளுக்கு உணர்வு பிறக்கிறது.

"ஏடா! யார் நீ? என்னை ஏன் கொட்டிழுக்கிறாய்?" என்று கையை உதறிக்கொண்டு ஏதும் அறியாதாள் போல் கேட்கிறாள்.

"பெண்ணே! நீதான் என்னை நாள்தோறும் கண்டிருக்கிறாயே! உன்னோடு பேசவேண்டும் என்ற பேரவா!"

"இந்த ஆட்டிடையர் சேரியிலுள்ள பெண்களையெல்லாம், ஒரு குடும்பம் விடாமல் விரும்புவதுதான் உன் வேலையா?"

"உன்னைத்தானே விரும்புகிறேன்! வேறு யாரையும் நான் விரும்பவில்லையே!"

"நீ என்னை விரும்புகிறாய்! நான் உன்னை விரும்பவேண்டாமா?"

"நீ தான் என்னை விரும்புகிறாயே!"

"நான் எங்கே உன்னை விரும்பினேன்? நான் உன்னை விரும்புவதாகச் சொல்லினேனா?"

"நீ வாய் திறந்து சொல்லவில்லை! ஆனால் நான் அறியும்படி காட்டிக்கொண்டாய்!"

"நான் உன்னிடத்தில் எப்பொழுது காட்டிக்கொண்டேன்?"

"நான் உன்னை இறுக அணைத்துக்கொண்டபோது, நீ என்னைத் தடுக்கவில்லையே! அது போதுமே நீ என்னை விரும்புகிறாய் என்பதற்கு!"

"நான் உன்னை விரும்பியா தடுக்காமல் நின்றேன்? அல்லவே! உன்னோடு ஒரு விளையாட்டைப் புரிய, நீ என்ன செய்கிறாய் என்று பார்ப்பதற்கல்லவா, என் உடலை உன்னிடம் தந்து, உன்னை அணைந்து நின்றேன்! அது கிடக்கட்டும், என் கையைப் பிடித்து இழுத்தாயே, எங்கு என்னை அழைத்தாய்?"

"அதோ! அந்தச் சோலைக்குப் போகலாம், அங்கே கூடி மகிழ்ந்திருக்கலாம் என்றுதான்!"

"என்ன? கூடி மகிழ்ந்திருக்கலாம் என்றா?" என்று திடுக்கிட்டுக் கேட்கிறாள் அப்பூங்கொடியாள்.

"ஆமாம்! என் ஆவல் தீரவேண்டுமானால், உன்னை ஆரத்தழுவிக் கூடி இன்புற்றிருந்தால் தானே ஆகும்!" என்று வெடுக்கென்று தன் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துகிறான் அக் கட்டிளங்காளை.

"தேள் கொட்டினால், அதன் கடுப்பு நீங்க, அப்பொழுதே மருந்து இட்டுத் தீர்ப்பதைப் போல், உனது காம வேட்கை உன் உள்ளத்து எழுந்த அப்பொழுதே, அதன் துடிப்பு தீர்க்க வேண்டிய தொன்றோ? விளையாட்டுக்காக, நீ என் மெய்யைத் தொட்டணைக்க அனுமதித்தால், நான் அந்த அளவிலேயே புணர்ச்சிக்கும் எளிதாக உடன்படுவேன் என்று எண்ணினாயோ? மோர் வேண்டும் என்று விரும்பிய ஒருவனுக்கு, மோர் கொடுக்க மனமுவந்து முன்வந்த ஒருத்தி, வெண்ணெய்யைக் கேட்டால், வெண்ணெய்யையும் எளிதாகக் கொடுத்துவிடுவாள் என்று எண்ணுவதுபோலிருக்கிறது, நீயும் எண்ணுவது!" என்று இழித்தும் பழித்தும் கூறினாள் தலைவி.

அதுகேட்ட தலைவன், அவளுடைய ஒளி வீசும் நெற்றியினைப் பார்த்துக்கொண்டே, "பெண்ணே! ஒளிவீசும் நெற்றியை யுடையவளே! நாமிருவரும் கூடி மகிழும் கூட்டத்தை நீ விரும்பவில்லையாயின்—நீ மறுத்துக் கூறுகிறாயாயின், அந்தக் கூட்டம் அறவே வேண்

றவரின் உருவோவியத்தைத் தங்கள் தங்கள் உள்ளத்தில் குடியேற்றிக்கொள்கிறார்கள்.

அவளோடு எப்படியாவது காதல்மொழி பேசி, அவளைக் கட்டியணைத்து முத்தமிட வேண்டும் என்று எண்ணங் கொள்கிறான். அதற்கிணங்க தன்னைத் தயாராக்கிக்கொள்வதற்கு, ஒரு நாள், துணிவை வரவழைத்துக் கொண்டு சாலையில் வந்து காத்திருக்கிறான். மோர்க் கூடையைத் தூக்கிக்கொண்டு அந்தப் பூங்கொடி வருகிறாள். அச்சமும் ஆவலும் அவனை ஆட்டிப்படைக்கின்றன. அவளும் அவ்விளையோனின் அழகைப் பருகிக் கொண்டே, நடந்துவந்து, நாணிக்கோணி, மெல்லடி யெடுத்துவைத்து நகர்ந்து செல்கிறாள். காதலன் மெதுவாகப் பின்சென்று அவளுடைய சடையைப்பிடித்து இழுக்கிறான். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு அத்துணையும் சேர்ந்து ஒருநொடியில் அவளுக்குத் திகைப்பைத் தருகிறது. அவள் தன் திகைப்பிலிருந்து மீளுவதற்குள், அவன் அவளைக் கட்டியணைத்து விடுகிறான். அவளோ மெய்மறந்து, தன்னிலை மறந்து நிற்கிறாள். தலையிலிருந்த கூடையை அலுங்காமல் அப்படியே இறக்கிவைத்துவிட்டு, அவன் கையைப் பிடித்துச் சோலைப்பக்கம் இழுக்கிறான். அப்பொழுதுதான் அவளுக்கு உணர்வு பிறக்கிறது.

“ஏடா! யார் நீ? என்னை ஏன் தொட்டிழுக்கிறாய்?” என்று கையை உதறிக்கொண்டு ஏதும் அறியாதாள் போல் கேட்கிறாள்.

“பெண்ணே! நீதான் என்னை நாள்தோறும் கண்டிருக்கிறாயே! உன்னோடு பேசவேண்டும் என்ற பேரவா!”

“இந்த ஆட்டிடையர் சேரியிலுள்ள பெண்களையெல்லாம், ஒரு குடும்பம் விடாமல் விரும்புவதுதான் உன் வேலையா?”

“உன்னைத்தானே விரும்புகிறேன்! வேறு யாரையும் நான் விரும்பவில்லையே!”

“நீ என்னை விரும்புகிறாய்! நான் உன்னை விரும்பவேண்டாமா?”

“நீ தான் என்னை விரும்புகிறாயே!”

“நான் எங்கே உன்னை விரும்பினேன்? நான் உன்னை விரும்புவதாகச் சொல்லினேனா?”

“நீ வாய் திறந்து சொல்லவில்லை! ஆனால் நான் அறியும்படி காட்டிக்கொண்டாய்!”

“நான் உன்னிடத்தில் எப்பொழுது காட்டிக்கொண்டேன்?”

“நான் உன்னை இறுக அணைத்துக்கொண்டபோது, நீ என்னைத் தடுக்கவில்லையே! அது போதுமே நீ என்னை விரும்புகிறாய் என்பதற்கு!”

“நான் உன்னை விரும்பியா தடுக்காமல் நின்றேன்? அல்லவே! உன்னோடு ஒரு விளையாட்டைப் புரிய, நீ என்ன செய்கிறாய் என்று பார்ப்பதற்கல்லவா, என் உடலை உன்னிடம் தந்து, உன்னை அணைந்து நின்றேன்! அது கிடக்கட்டும், என் கையைப் பிடித்து இழுத்தாயே, எங்கு என்னை அழைத்தாய்?”

“அதோ! அந்தச் சோலைக்குப் போகலாம், அங்கே கூடி மகிழ்ந்திருக்கலாம் என்றுதான்!”

“என்ன? கூடி மகிழ்ந்திருக்கலாம் என்றா?” என்று திடுக்கிட்டுக் கேட்கிறாள் அப்பூங்கொடியாள்.

“ஆமாம்! என் ஆவல் தீரவேண்டுமானால், உன்னை ஆரத்தழுவிக் கூடி இன்புற்றிருந்தால் தானே ஆகும்!” என்று வெடுக்கென்று தன் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துகிறான் அக் கட்டிளங்காளை.

“தேள் கொட்டினால், அதன் கடுப்பு நீங்க, அப்பொழுதே மருந்து இட்டுத் தீர்ப்பதைப் போல், உனது காம வேட்கை உன் உள்ளத்து எழுந்த அப்பொழுதே, அதன் துடிப்பு தீர்க்க வேண்டிய தொன்றோ? விளையாட்டுக்காக, நீ என் மெய்யைத் தொட்டணைக்க அனுமதித்தால், நான் அந்த அளவிலேயே புணர்ச்சிக்கும் எளிதாக உடன்படுவேன் என்று எண்ணினாயோ? மோர் வேண்டும் என்று விரும்பிய ஒருவனுக்கு, மோர் கொடுக்க மனமுவந்து முன்வந்த ஒருத்தி, வெண்ணெய்யைக் கேட்டால், வெண்ணெய்யையும் எளிதாகக் கொடுத்துவிடுவாள் என்று எண்ணுவதுபோலிருக்கிறது, நீயும் எண்ணுவது!” என்று இழித்தும் பழித்தும் கூறினாள் தலைவி.

அதுகேட்ட தலைவன், அவளுடைய ஒளி வீசும் நெற்றியினைப் பார்த்துக்கொண்டே, “பெண்ணே! ஒளிவீசும் நெற்றியை யுடையவளே! நாமிருவரும் கூடி மகிழும் கூட்டத்தை நீ விரும்பவில்லையாயின்—நீ மறுத்துக் கூறுகிறாயாயின், அந்தக் கூட்டம் அறவே வேண்

தனது ஆற்றுமையை அறிவிக்க, அவளும் அவனது தன்மையையறிந்து, அவனைக் காதலிக்க உடன்பட்டுப், பிறர் காணும் பொதுவிடத்தில் காதலைப் பரிமாறிக் கொள்ளுதல் ஆகாது, தான் கன்றுமேய்க்கப் போகும் இடத்திற்கு வருவாயாக என்று சொல்லிப் போகும் காதற் காட்சியே, மேலே தெளிவுபடுத்தப்பட்டிருப்பதாகும். இக்காதலோவியத்தைச் செய்யுள் வடிவில் தீட்டித்தந்த பெருர்புலவர் சோழன் நல்லுத்திரன் ஆவார். இச்செய்யுள் முல்லைக்கலியில் 10-வது செய்யுளாக அமைந்துள்ளது. இடையர் சேரியில் வாழ்வோரின் பண்பு பழக்க வழக்கங்களை யொட்டியே, அவர்களின் பேச்சும் பொருளும் அமையும் என்பதை, இடையர்க்கொத்த உவமைகளை கையாண்டிருப்பதும், காதலன் காதலியரின் மனநிலையை விளக்கிக் காட்டியிருப்பதும் புலவரின் புலமைத்திறமையை நன்கு காட்டுகிறது. சோழன் நல்லுத்திரன் பெரும்புலவனாக மட்டுமல்லாமல், நாடாண்ட காவலனாகவும் இருந்துவந்தான். அவன் அரசநிலையில் வீற்றிருந்தாலும், நாட்டின் பொதுவாழ்க்கை நிலையோடு ஒன்றி வாழ்ந்துவந்தவனுவான் என்பது இச்செய்யுளி லிருந்தே எளிதில் தெளியலாம்.

ஃ ஃ ஃ

கடுகொள் இருங்காப்பில் புல்இனத்(து) ஆயர்
குடிதொறும் நல்லாரை வேண்டுதி எல்லா
இடுதேள் மருந்தோநின் வேட்கை தொடுதரத்(து)
உன்னித்தந்(து) ஆங்கே நகைகுறித்(து) எம்மைத்
திளைத்தற்(கு) எளியமாக் கண்டை அளைக்(கு)எளியாள்
வெண்ணெய்க்கும் அன்னள் எனக்கொண்டாய் ஒள்நுதாஅல்
ஆங்குநீ கூறின் அனைத்தாக நீங்குக;

அச்சத்தால் மாறி அசைவினால் போத்தந்து
நிச்சம் தடுமாறும் மெல்லியல் ஆய்மகள்
மத்தம் பிணித்த கயிறுபோல் நின்நலம்
சுற்றிச் சுழலு(ம்)என் நெஞ்சு;

விடிந்த பொழுதினும் இல்வயில் போகாது
கொடும்தொழுவின் உட்பட்ட கன்றிற்குச் சூழும்
கடுஞ்சூல்ஆ நாகுபோல் நிற்கண்டு நாளும்
நடுங்கஞர் உற்ற(து)என் நெஞ்சு;

எவ்வம் மிகுதர எந்திறத்(து) எஞ்ஞான்றும்
நெய்கடை பாலில் பயன்யாதும் இன்றாகிக்
கைதோயல் மாத்திரை அல்லது செய்தி
அறியா(து) அளித்(து)என் உயிர்;

அன்னையோ, மன்றத்துக் கண்டாங்கே சான்றோர்மகளிரை
இன்றி அமையேன்என்(று) இன்னவும் சொல்லுவாய்
நின்றாய்நீ சென்றீ எமர்காண்பர் நாளையும்
கன்றொடு சேறும் புலத்து. —(முல்லைக்கலி-10)

[கடிகொள் - காவல்மிகுந்த; இருங்காப்பில் - பெரிய சேரியிடத்து; புல்இனத்துஆயர் - ஆட்டிடையர்; நல்லாரை – மகளிரை; வேண்டுதி-விரும்புவாய்; எல்லா - ஏடா; திளைத்தற்கு எளியமா - புணர்ச்சிக்கு எளியேமாக; கண்டை - மனதாலே கண்டாய்; அளைக்கு - மோருக்கு; ஒள்நுதாள் - ஒளிபொருந்திய நெற்றியை யுடையவளே; நிச்சம் - நாள்தோறும்; மத்தம் - தயிர்கடையும் மத்து; சூல்ஆ - சூல்கொண்ட பசு; நாகு – பசு; நடுங்கஞர் - நடுங்குகின்ற வருத்தத்தை; எவ்வம் - வருத்தம்; அன்னையோ - அத்தன்மையுடையையோ; சான்றோர் - அமைதியுடையோர்; சென்றீ – போவாயாக; புலத்து – நிலத்து.]

அதிசயம்—ஆனால் உண்மை

சமர் தொடுத்த சவம்

சிட் என்ற ஸ்பானிய போர்ப்படைத் தலைவன், மூர் சாதியினரையும், அவர்களது அரசனான புகார் என்பவனையும் முறியடிக்க பேரவாக் கொண்டிருந்தான். அவன், தான் இறந்துபோனாலும், தன்னுடைய சவத்தைப் படைத்தலைவனாகவே கொண்டு சென்று போரிட்டு வெற்றிபெற வேண்டும் என்ற தன் ஆவலைப் போர்வீரர்களிடத்தில் வெளியிட்டிருந்தான். சிட் சண்டையில் இறந்தான். அவன் விரும்பியபடியே, அவனது படைவீரர்கள், அவனது உடலைப் பாடம் செய்து, குதிரையின் மேல் ஏற்றிவைத்துப் படையை முன்னேறச் செய்தனர். பிணம் படைத்தலைவனாகவே காட்சியளிக்க, சிட்டின் படை இறுதியில் வெற்றியையே பயத்தது. சிட்டின் எண்ணம் நிறைவேறிற்று.

ஃ ஃ ஃ

நான்கு மனைவிமார் வேண்டும்

வட இந்தியாவை ஆண்ட பேரரசர்களுள் ஒருவனான அக்பர் கீழ்க்கண்டவாறு தம் விருப்பத்தை வெளியிட்டார். அது வருமாறு:—

"ஒவ்வொரு மனிதனும் நான்கு மனைவிமாரைக் கொண்டிருக்கவேண்டும். குழந்தைகளைப் பெற்றெடுக்க ஒரு இந்து மனைவி; பேசி மகிழ்ந்திருக்க ஒரு பாரசீக மனைவி; வீட்டினை நன்கு அணிசெய்துவைத்துக்கொள்ள ஒரு ஆப்கனிய மனைவி; மற்றவர்களுக்கு அச்சம் பிறக்கவேண்டி அடிப்பதற்காக ஒரு துருக்கி மனைவி, ஆக நான்கு மனைவிமார் ஒருவனுக்குத் தேவை."

ஃ ஃ ஃ

தன்னுடைய கல்லறைக்குத் தன்வழிபாடு

அலெக்ஸாண்டர் ரிஸ்ட்டர் என்பவர் தம்முடைய கல்லறைக்குத் தாமே அறுபது ஆண்டுக்காலம் மாலை சாற்றி வழிபட்டுவந்தாராம். ஒவ்வொரு வாரமும் கல்லறைக்குச் சென்று மீளுவது அவரது வழக்கம். அலெக்ஸாண்டர் ரிஸ்ட்டர் ஒருமுறை ஊரைவிட்டு வெளியூர் போயிருந்தார். அவர் காணாமற் போய்விட்டார் என்ற பரபரப்பு ஊரில் எழுந்தது. அவரை ஊரெங்கும் பலர் தேடிப் பார்த்தார்கள். இறுதியில் ஆற்றில் பிணம் ஒன்று கரையொதுங்கிக் கிடப்பதைப் பார்த்தார்கள். ரிஸ்ட்டருக்கும் அந்தப் பிணத்திற்கும் அதிக வேறுபாடு காணப்படாததால், அந்தப் பிணம் ரிஸ்ட்டரின் பிணமே என்று கருதி, அதனை எடுத்துவந்து புதைத்து, அதன் கல்லறைமீது அலெக்ஸாண்டர் ரிஸ்ட்டர் என்ற பெயரையும் பொறித்தனர். அலெக்ஸாண்டர் மீண்டும் தம் ஊருக்குத் திரும்பிவந்தபோது, தம் பெயரில் கல்லறை அமைந்திருப்பதைக் கண்டார். அந்தக் கல்லறைக்கு வழிபாடு செய்வது தம் கடமை என்று கருதி வழிபாடு செய்துவரலானார்.

ஃ ஃ ஃ

ஒரு டிக்கட் போதுமானதே !

மிஸஸ் பிராங் ஸ்காட் என்ற அம்மையார் பதின்மூன்று குழந்தைகளை அழைத்துக்கொண்டு ஒரு பஸ்ஸில் ஏறினார்கள். பஸ் கண்டக்டரிடம் அந்த அம்மையார் ஒரு டிக்கட்டுக்கு மட்டும் பணம் நீட்டினார்கள். அதனை வாங்கிய கண்டக்டர் "ஒரு ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடத்தை அப்படியே ஒரு டிக்கட்டுக்கு அழைத்துச் செல்லமாட்டேன்" என்று கூறினான். அதற்கு அந்த அம்மையார் "எல்லாம் என் குழந்தைகள்தாம். எந்தக் குழந்தைக்கும் ஐந்து வயதுக்குமேல் ஆகவில்லை. எனவே எனக்குமட்டுந்தான் நான் டிக்கட் வாங்கவேண்டும்" என்று வாதிட்டார்களாம்.

அந்த அம்மையார் ஐந்தாண்டுக் காலத்திற்குள், மூன்றுமுறை, மூன்று மூன்று பிள்ளைகளாகவும், இரண்டு முறை இரண்டு இரண்டு பிள்ளைகளாகவும் பெற்றெடுத்தார்களாம். இறுதியில் அந்த அம்மையார் ஒரு கட்டணம்தான் செலுத்தினார்கள்; ஆனால் பிள்ளைகள் பஸ்ஸில் பல இடங்களிலும் உட்கார்ந்துகொண்டார்கள்.

வீரன்தான் ஆனால் சோகச்சாவு

பாப்பி லீச் என்ற உடலுறுதி படைத்த வீரன், தன் வீரத்தன்மையைக் காட்ட ஒரு பீப்பாக்குள் புகுந்துகொண்டு, நையாகரா நீர் வீழ்ச்சியில், வீழ்ச்சியோடு சேர்ந்து விழுந்தானாம், இது நடந்தது 1911-ஆம் ஆண்டில். பிறகு சில ஆண்டுகள் கழித்து அவன் நியூஜிலாந்தின் தெருவில் நடந்துகொண்டு போகும் போது, ஒரு வாழைப்பழத் தோல் வழுக்கிவிட, அதன் காரணமாகக் கீழே விழுந்து இறந்து பட்டானாம். நீர் வீழ்ச்சியில் போகாத உயிர், வாழைப் பழத் தோலால் போயிற்று!

ஃ ஃ ஃ

பின்னால் ஓடும் ஆறு

ஆப்பிரிக்கா கண்டத்தின் வடகிழக்குப் பகுதியில் ஓடும் டாட்ஜெளரா என்ற ஆறு, டாட்ஜெளரா என்ற விரிகுடாக்கடலிலிருந்து நீரைக்கொண்டு, அஸ்ஸல் என்ற ஏரியில்போய் விழுகிறது. மற்றைய ஆறுகளெல்லாம் மழை நீரையும், ஏரி நீரையும் கடலுக்குக் கொண்டு செல்ல, இந்த ஆறு மட்டும் கடல் நீரை ஏரிக்குக் கொண்டுசெல்கிறது.

ஃ ஃ ஃ

கடவுளுக்குக் கடிதம்

பொஹிமியாவைச் சேர்ந்த லிப்டா என்ற இடத்தில் "கடவுள்" பெயருக்கு முகவரி எழுதப்பட்ட கடிதம் ஒன்று அஞ்சல் நிலையத்தில் சேர்க்கப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தை எங்கு அனுப்புவது என்று தெரியாமல், இறுதியாகப் போப்பாண்டவர் வாழும் ரோம் நகருக்கு அதனை அனுப்பிவைத்தனர். சில நாட்களில் அந்தக் கடிதம் "முகவரியுடையவர் காணப்படவில்லை" என்று எழுதப்பட்டு, அனுப்பியவருக்கே மீண்டும் அனுப்பிவைக்கப் பட்டது.

ஃ ஃ ஃ

உலகிலேயே அதிகச் சம்பளம்

உலகிலேயே மிக அதிகச் சம்பளம் வாங்கியவன் ஆஸ்திரியாவின் பேரரசனான முதலாம் ஜோஸப் என்பவனாவான். அவன் ஆண்டு ஒன்றுக்கு 44,12,000 டாலர்கள் அல்லது ஏறத்தாழ 2½ கோடி ரூபாய் சம்பளமாக வாங்கினான். இது வருமானம் என்ற மாதிரியிலல்ல, சம்பளமே. அவன் தன் வாழ்நாளில் 27,46,00,000 டாலர்கள் சம்பளம் வாங்கினான்; ஏறத்தாழ ரூ 138 கோடி வாங்கினான். இவ்வளவு அதிகச் சம்பளம் வாங்கினவன் உலகில் வேறு யாரும் இல்லை.

ஃ ஃ ஃ

பெரும்புலவரின் மகள் தற்குறி

உலகப் பெருங்கவிஞர்களின் முன் வரிசையில் நிற்கக்கூடிய ஆங்கிலப் பெரும்புலவர் ஷேக்ஸ்பியரின் மகளுக்கு எழுதப்படிக்கத் தெரியாதாம். அவள் ஒரு தற்குறியாகவே காலங் கழித்தாளாம்.

ஃ ஃ ஃ

சதுரவடிவு முட்டை

அமெரிக்காவில் நியூ பெட்போர்டு என்ற இடத்தில் இருந்த ஜோர்ஸ்குக் என்பவர் வளர்த்த கோழியொன்று நல்ல சதுர வடிவாக அமைந்த முட்டையொன்றைப் போட்டதாம் மற்றைய முட்டைகளெல்லாம் உருண்டை வடிவாக இருக்க, ஒரே ஒரு முட்டைமட்டும் நான்கு பக்கங்களும் சதுரவடிவில் அமைந்ததாக இருந்ததாம்.

ஃ ஃ ஃ

நினைவுத்திறம்

சைரஸ் என்ற பாரசீக அரசன், தன்னுடைய படையிலிருந்த ஒவ்வொரு போர் வீரனுடைய பெயரையும் அறிந்திருந்து, அவர்களை அப் பெயராலேயே அழைப்பானாம். பல்லாயிரக் கணக்கானவர்கள் கொண்ட படையில், அவன் நேரிடையாக அறியாதவர் என்று ஒருவர்கூட இல்லையாம்.

தெமிஸ்டாகிளீஸ் என்ற கிரேக்க நாட்டு அறிஞர் ஏதென்ஸ் நகரில் வாழ்ந்த 20000 பேர்களின் பெயர், அங்க, அடையாளங்கள் அத்தனையையும் அப்படியே கூறிவிடுவாராம்.

ஃ ஃ ஃ

மிகச்சிறிய சர்ச்

உலகில் மிகச்சிறிய சர்ச் அமெரிக்காவில் கென்டக்கி மாகாணத்தில், லோலோனியா என்ற இடத்தில் இருக்கிறது. அந்தச் சர்ச்சில் மூன்றுபேர்கள் தாம் உட்காரலாம்.

சிறுகதை

கருணை!

நள்ளிரவில் திடீரென்று சின்னான் எழுந்து உட்கார்ந்தான். கண்ணைக் கசக்கிக்கொண்டு, சுற்றிலும் கையால் தடவிக்கொண்டு எழுந்து நின்றான். அந்தச் சிறையின் கருங்கல் சுவரும் இரும்புக் கம்பிகளும் பனியால் மிகவும் சில்லிட்டிருந்தன. இன்னும் சூழ்ந்த கரிய இருள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தது. தூரத்தில் விட்டு விட்டுக் கத்திக்கொண்டிருந்த இரண்டொரு தவளைகளின் கூச்சலைத் தவிர, வேறெதுவும் அந்த இரவின் அமைதியைக் கெடுக்கவில்லை.

சின்னான் தூங்கியது இரண்டுமூன்று நாழிக்குமேலிருக்காது. இருந்தாலும், எப்படி அந்தச் சிறு அளவுகூடத் தூங்கமுடிந்தது என்று அவனே ஆச்சரியமடைந்தான். அந்தக் கோட்டைக்குள் அடைக்கப்பட்டதிலிருந்து—சரியாகப் பதினைந்து நாட்களுக்கு முன்தான் அடைத்தார்கள்—அவனுக்குச் சரியாகத் தூக்கமே வருவதில்லை. ஆனால் அன்று மட்டும் அவனையுமறியாமல் சிறிதுநேரம் ஆழ்ந்து எவ்விதக் கவலையுமின்றி உறங்கியிருக்கிறான். அந்த இரவு—அவனுடைய வாழ்வின் கடைசி இரவில் அவன் சிறிது தூங்கினானென்றால் அது ஆச்சரியப்படத்தக்கதுதானே! கோட்டையில் கைதியாக அடைக்கப்பட்டிருக்கும் அவன், சிறிது நேரத்திற்கெல்லாம், கிழக்கில் வெள்ளி முளைத்ததும், தூக்கில் போடப்பட்டுவிடுவான்.

ஒரு இருபது நாட்களுக்குமுன் தனக்கு இத்தகைய கதி நேருமென்று சின்னான் எதிர்பார்க்கவில்லை. யாரும் எதிர்பார்த்திருக்கவும் முடியாது. திடீரென்று நேர்ந்த சம்பவமொன்றால்—அதுவும் அவனுடைய அசட்டுத்தனத்தால் என்றுதான் சொல்லவேண்டும்—அவனுக்கு அந்தநிலை ஏற்பட்டது.

சின்னான் இருந்த நாட்டையாண்ட ராஜா—அவனுடைய பெயர் சின்னானுக்குச் சரியாகத் தெரியாது—அவர் சின்னான் கிராமம் வழியாக, பக்கத்திலிருக்கும் காட்டுக்கு வேட்டையாட வரப்போகிறார் என்று செய்திவந்தது. ராஜா வருகிறாரென்றால், எப்பொழுதும் இருக்கவேண்டிய குதூகலமும், ஆடம்பரமும் சின்னானுடைய கிராமத்தில் அந்தத்தடவை யில்லாதுபோயிற்று. நாட்டாண்மைக்காரன் என்ற முறையில் சின்னான், எவ்வளவோ பாடுபட்டும், வழக்கமாக ராஜாவுக்குத் தரவேண்டிய காணிக்கைச் சேரவில்லை. யாரைக் கேட்டாலும், மழையில்லை, விளைச்சல் இல்லை, மாடு செத்துவிட்டது, வீடு விழுந்துவிட்டது என்று காரணமே தந்தனர். அவர்கள் பேரிலும் குற்றமில்லை. நிலைமையும் அவ்வாறாகத்தான் இருந்தது. கிடைத்த வரையில், தானியத்தையும், மற்றவைகளையும் குவித்து ராஜாவின்முன் சின்னான் வைத்தான். ராஜா மிகவும் நல்ல குணம் படைத்தவராகவும், சிறந்த பக்திமானாகவும் இருந்ததால் சின்னான் வைத்த காணிக்கைக் குறைவாயிருப்பதைக் கண்டு, கோபிக்கவில்லை. ஆனால் வழக்கமாக வரவேண்டிய காணிக்கை வராததின் காரணத்தைக் கேட்டபொழுது, சின்னான் அந்த ராஜாதிராஜன் முன் தெண்டனிட்டு, காரணத்தையெல்லாம் சொன்னான். ராஜாவும் அவன்நிலை கண்டு இரங்கி, புன்னகை செய்து, போகும்படி தலையசைத்தார். தப்பித்தோமென்று சின்னான் உடனே அந்த இடத்தைவிட்டு நகர்ந்திருக்கலாம். ராஜா புன்னகை காட்டியதை நம்பி, நாட்டாண்மைக்காரன் சின்னான் தங்களுடைய குறைகளையெல்லாம் சொல்ல ஆரம்பித்துவிட்டான்; இவ்வளவு நல்ல ராஜாவிடம் நேரில் சொன்னால் குடிமக்கள் படும் அவதி தீருமென்ற நம்பிக்கையில். ராஜாவினுடைய ஆட்கள், அதிகாரிகள், பெரிய தனக்காரர்கள் முதலியவர்கள் செய்யும் அக்கிரமங்களைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்துவிட்டான். மழையைப்பற்றி, விளைச்சலைப் பற்றியெல்லாம் குறைசொன்னது சரி, ஆனால் ஒரு ராஜாவின் ஆட்களைப்பற்றிக் குறைசொல்வதென்றால், அதிலும் ராஜாவிடமே சொல்வதென்றால், எவ்வளவு ராஜத்துரோகமானக் குற்றமாகும். அந்த நல்ல ராஜாகூட பொறுமையிழந்து, குற்றஞ்சாட்டுகிற துரோகியைப் பிடித்து, தூக்கில்போடும்படி சொல்லிவிட்டு அவர் காட்டுக்குப் போய்விட்டார், வேட்டையாட. ராஜாவின் ஆட்கள் சின்னானை இழுத்துப்போய் கற்கோட்டைச்சிறையில் அடைத்து

வைத்தார்கள். ராஜ தண்டனையென்றால் அப்படித்தான் இருக்குமென்று ஊர் மக்களும் பேசிக்கொண்டனர். தூக்குபோடுவதென்றால் அமாவாசை நாளன்றுதான் போடுவது, என்ற வழக்கம் அந்தக் கோட்டையில் இருந்ததால், அமாவாசை வர பதினைந்து நாள்வரை சின்னான் உயிரோடு விட்டுவைக்கப்பட்டிருந்தான்.

சின்னான் அறைக்குள்ளே நடமாடிக்கொண்டிருந்தான். காலடியில் படுக்கையாகப் போடப்பட்டிருந்த வைக்கோல் மட்டும் இடறிக்கொண்டிருந்தது. அன்று மட்டும் துடுக்குத்தனமாகப் பேசாதிருந்தால்—அதைப்பற்றி இப்பொழுது நினைத்து என்ன பயன்? கோழி கூவியதும், தூக்குக் கயிற்றில் தொங்கவேண்டும். பெருமூச்செறிந்துவிட்டு, சின்னான் உட்கார்ந்தான். முதல் நாள் அவனுக்குத் தரப்பட்ட சோறு, தீண்டப்படாமல் அப்படியேக் கிடப்பது தெரிந்தது. செத்துப் போகிறதுதான் போகப்போகிறோம், ஒரு வேளை நன்றாக, வயிறடங்கச் சாப்பிட்டுவிட்டாவது சாகலாம் என்று அவனுக்குத் தோன்றியது. சரியென்று சாப்பிட உட்கார்ந்தான். ஆனால் குவளையில் தண்ணீர் இல்லை. தண்ணீர் கேட்டு, காவற்காரனைக் கூப்பிட்டான். சின்னான் போடும் சத்தத்தைக் கவனிக்காமல், காவற்காரன் எங்கோ மூலையில் தூங்கிக்கொண்டிருந்தான். சின்னான் கம்பியைப்பிடித்து, கதவையசைத்துச் சத்தம் போட்டும் காவற்காரன் வரவில்லை. ஆனால் வழக்கத்திற்கு மாறாக, அவன் அசைத்தபொழுது கதவு முன்பக்கம் அசைந்துகொடுத்தது! சற்றுப் பலமாகத் தள்ளினான், கதவு திறந்தது! சின்னானால் நம்பமுடியவில்லை. ஆச்சரியத்துடன் பார்த்தான். கதவு திறந்துதான் இருந்தது, அதன் பூட்டு சரியாகப் பூட்டப்படாததால்! ஒரு கணம் திகைப்பும், பயமும் வந்தது. கதவை மூடிக்கொண்டு உள்ளே வந்து நின்றான், என்ன செய்வதென்று புரியாமல்.

தப்பித்துக்கொண்டு ஓடலாம், அதிலும் அந்தக் கற்கோட்டையிலிருந்து தப்பித்துக் கொண்டு ஓடமுடியும் என்ற எண்ணம் அவனுக்கு அதற்குமுன் தோன்றியதேயில்லை. இப்பொழுதோ, கதவு திறந்திருக்கிறது! கடைசிச் சந்தர்ப்பம்! சின்னான் கதவைத் திறந்துகொண்டு சுவரோரமாக வெளியே நகர்ந்து சென்றான். காவல்காப்பவன் படிக்கட்டின் கீழே படுத்துக் குறட்டைவிட்டுத் தூங்குவது தெரிந்தது. மெதுவாக அடிமேல் அடிவைத்து படிக்கட்டில் ஏறி, மேல் வந்தான். அங்கு இரண்டு பாராக்காரர்கள் சுற்றிக்கொண்டிருந்தார்கள். அவர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டால், பின் தூண்களின் பின்னால் மறைந்து மறைந்து கோட்டை வாசற்படி வரைச் சென்றுவிடலாம். என்ன செய்வதென்று சின்னான் பார்த்தான்? ஒரு தூண் மறைவில் நின்று, கீழே கிடந்த கல்லை எடுத்து ஒரு பாராக்காரன் முதுகின்மீது போட்டான். கல்லடி பட்டதும், போய்க்கொண்டிருந்த பாராக்காரன் திரும்பி, மற்றொரு மூலை நோக்கி போய்க்கொண்டிருந்த பாராக்காரன்தான் போட்டிருக்கவேண்டுமென்று நினைத்து கல்லை எடுத்துக்கொண்டு, அவனை நோக்கிப் போனான். சின்னான் விரைவாக அந்த இடத்தைத் தாண்டி வெளிவந்தான். பின் மறைந்து, மறைந்து கோட்டைக் கதவுவரை வந்துவிட்டான்

கோட்டைச் சுவரும், உயர்ந்து நின்ற வாசற்படியும் அந்த இருட்டில் பயங்கரமாகக் காட்சியளித்தன. இவ்வளவு தூரம் சின்னான் வந்துவிட்டபோதிலும், இனி கோட்டைக் கதவைக் கடந்து போகவேண்டுமே வாயிலுக்குப் பக்கத்திலிருந்த பெரிய தூணின் பின் மறைந்து, என்ன செய்வதென்று யோசித்துக்கொண்டிருந்தான். இன்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் பொழுது விடிந்துவிடும். அதற்குள் தப்பிவிடவேண்டும். இல்லாவிட்டால், பொழுது விடிந்ததும் கைதியைத் தேடிப்பார்த்துக் கண்டுபிடித்துவிடுவார்கள். என்ன செய்வது? கோட்டைக் கதவோ பூட்டப்பட்டிருக்கிறது. சாவிக்கொத்தைக் கையில் வைத்தபடி ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவன்முன் மற்றொருவன் நடமாடிக் கொண்டிருந்தான். இருவரும் வாள்தாங்கித் தயாராக இருந்தனர். ஒரே பாய்ச்சலில் ஒருவன்மீது பாய்ந்து கீழே தள்ளிவிடலாம். ஆனால் மற்றவன் அதற்குள் உதவிக்கு வந்துவிடுவான். இரண்டுபேர்களைச் சமாளிப்பது கஷ்டம். இவர்களுடன் சண்டைபோட்டு மீறிப் போனால் கூட, உள்ளிருந்து வேறு பலர் அவனைப் பின் தொடர்ந்து வந்துவிடுவார்கள். கடைசியில் பிடித்துவிடுவார்கள். தூக்குக் கயிறு நிச்சயம் கிடைத்துவிடும். ஆகவே கோட்டைக் கதவின் வழியாகப் போக முயற்சிப்பது பயனளிக்காது. என்னசெய்வதென்று சின்னான் இருக்கும்

பொழுது, வேறு இரண்டு காவற்காரர்கள் கையில் பந்தத்துடன் அவன் இருக்கும் பக்கமாக வந்தனர். அவர்கள் கண்ணில் படாமல் சின்னான் முன்னிருந்த இடத்தைவிட்டுக் கிளம்பி, கோட்டைச் சுவருக்குப் பக்கத்தில் போடப்பட்டிருந்த வைக்கோர்போரில் மறைந்துகொண்டான். சத்தம் கேட்டு, காவற்காரர்கள் திரும்பிப் பார்த்தனர். எதுவும் காணப்படாததால், அவர்கள் பேசாமல் போய்விட்டனர். மிக நடுக்கத்துடன் உட்கார்ந்திருந்த சின்னான் எழுந்து பக்கத்தில் அடி வைத்தபொழுது, ஒரு நீண்ட ஏணி அங்கு சார்த்தப்பட்டிருப்பதைப் பார்த்தான். ஆனால் அங்கு இருந்த மதிற்சுவர் அதைவிட இரண்டு மடங்கு உயரமாயிருந்தது. ஆனால் மற்றொரு யோசனை தோன்றியது. அந்த வைக்கோற்போரின்மீது ஏணியைச் சார்த்தினால் மதில்மேல் உட்கார்ந்துவிடலாம். ஆனால் அப்புறம் அங்கிருந்து கீழே எப்படி மறுபுறத்தில் இறங்குவது? குதித்தால் கால் கை முறிந்து, எழுந்து நடமாடவே முடியாது! ஆனால் அதற்கும் ஒரு வழி தோன்றியது. வைக்கோற் போர்மீது ஏணியை வைத்து ஏறுவதற்குமுன், ஒரு பெரிய வைக்கோற்கட்டைத் தயாரித்து, தன் தலையில் வைத்துக்கொண்டு ஏறினான்; மதில்மேல் போனதும், ஏணியைத் தள்ளிவிட்டு, வைக்கோற் கட்டை மறுபக்கத்தில் போட்டு அதன்மீது குதித்தான். கடைசியாக கோட்டைக்கு வெளியே சின்னான் வந்துவிட்டான்.

இருட்டு கொஞ்சம் குறையத்தொடங்கியது. வானம் வெளிற ஆரம்பித்தது. ஆனால் இன்னும் பொழுது விடியவில்லை. கோட்டையிலிருந்து சிறிது தூரத்தில் ஒரு காட்டாறு ஓடுகிறது. அதைக்கடந்துவிட்டால் காட்டுக்குள் புகுந்துவிடலாம். பின் எவர் கையிலும் அகப்படாமல் தப்பித்துக்கொள்ளலாம்!

சின்னான் ஆற்றங்கரையை நோக்கி, காலிலே முட்டுகிற கல், முள் எவற்றையும் லட்சியம் செய்யாமல் ஓடினான். வழியில் குதிரைகள் வரும் சத்தம் கேட்டது. பக்கத்திலிருந்த ஒரு செடிக்குப்பின் சின்னான் மறைந்துகொண்டான். குதிரை வீரர்கள் வேகமாக வந்துகொண்டிருந்தனர், கோட்டையை நோக்கி. அவர்கள் மறையும் வரை காத்திருந்து, பின் மீண்டும் ஆற்றங்கரையைநோக்கி, சின்னான் ஓடினான்.

கடைசியாக ஆற்றங்கரையும் வந்தது. இப்பொழுதுதான் சின்னானுக்கு உயிர் வந்தது. இனிக் கவலையில்லை யென்று பெருமூச்சுடன் திரும்பிப் பார்த்தான். தூரத்தில் 'மினுக் மினுக்' கென்று எரியும் சிறு வெளிச்சமே கற்கோட்டை இருப்பதை உணர்த்தியது. இருளின் கரை சிறிது சிறிதாகக் கரையத் தொடங்கியது. அவனுக்கு விடுதலை வாங்கித் தர தயாராக உள்ளதுபோல மிகுந்த வேகத்துடன் பொங்கும் நுரையுடன் காட்டாறு ஓடிவந்துகொண்டிருந்தது. ஆற்றில் வெள்ளம் அதிகமாக யிருந்ததுடன், அவன் நின்ற இடத்தில் ஆறு மிக அகண்டும் இருந்தது. அந்த நிலையில் ஆற்றில் குதித்து அக்கரை போய்ச் சேரமுடியுமா என்ற திகைப்பு ஒருகணம் சின்னானுக்கு வந்தது. அந்த ஆற்றைக் கடப்பதற்கு ஒரு பாலமிருந்தது. ஆனால் அது அங்கிருந்து இரண்டுகல்தொலைவிலிருந்தது. கரையோரமாக நடந்து, பாலத்தை யடைவதற்குள் பொழுது நன்றாக விடிந்துவிடும். தப்பிப் போன கைதியைத் தேடிவருகிற காவல்காரர்கள், சின்னானைச் சுலபத்தில் கண்டுபிடித்துவிடக்கூடும். இவ்வளவு தூரம் தப்பித்துவந்த பிறகு, ஆற்றில் வருகிற வெள்ளத்துக்காகப் பயந்து அகப்பட்டுக்கொள்ளக்கூடாது, வந்தது வரட்டுமென்று சின்னான் ஆற்றில் குதித்துவிட்டான்.

அவன் எதிர்பார்த்ததைவிட ஆற்றின் வெள்ளம் கடுமையாக இருந்தது. பாதிதூரம் போவதற்குள், நீர்ச்சுழிகளும், ஓட்டமும் அவனை நிலைகுலையச்செய்து விட்டன. கைகால்கள் சோர்வடைந்து, அதிலும் மலைப்பக்கத்தில் ஓடிவருகிற ஆறாக இருந்ததால் குளிர்ந்த தண்ணீரால் மரத்துவிடும் போலிருந்தது. அப்படியே ஆற்றில் அமிழ்ந்துபோய்விடுவது போலக் கூடத்தோன்றியது. ஆனாலும் சின்னான் மனந் தளராமல், இன்னும் இருபதடி, பத்தடி என்று, கரையைப் பார்த்துக்கொண்டே மெதுவாக போராடிப் போராடி வந்தான். கடைசியாக கரைக்குப் பக்கத்திலும் வந்துவிட்டான். ஆனால் அங்கு மிக ஆழமாக இருந்ததால், தண்ணீர் ஓட்டம் வேகமாக இருந்தது, சின்னானால் நிற்கவும் முடியவில்லை. மூச்சைப் பிடித்துக் கொண்டு, ஒரு பாய்ச்சல் போட்டு, கரையோரத்திலிருந்த மரத்தின் வேரைப் பிடித்துக் கொண்டான். அப்பொழுதும் கரைமேல் ஏறும்படியான வலு அவனிடமில்லை. கைகால்

கள் சோர்ந்துவிட்டன. ஆனால் பிடியைத் தளரவிட்டாலோ, ஆற்றுவெள்ளம் அடித்துக் கொண்டுபோய்விடும். பிடித்த பிடியை மட்டும் விடாமல் பிடித்துக்கொண்டு, சின்னான் சிறிது நேரம் தத்தளித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அவனுடைய அதிர்ஷ்டவசமாக, அந்தப்பக்கம் வந்த ஒரு சாது—காலைக் குளிர் தாங்காமல் உடல் முழுவதும் போர்வையால் மூடிக்கொண்டு ஒருவர், வந்தார். தத்தளித்துக்கொண்டிருக்கும் சின்னானைப் பார்த்ததும், அவர் கைகொடுத்து, அவனை மேலே தூக்கி விட்டார்.

மேலே வந்து ஒரு கல்மீது உட்கார்ந்து, சின்னான் சுற்றிலும் பார்த்தான். "அப்பாடா! கடைசியாகத் தப்பித்துக்கொண்டோம்" என்று பெருமூச்சுவிட்டுக்கொண்டான். வாழ்விலே எவ்வளவு சோதனைகள்! திடீர் மாறுதல்கள்! பதினைந்து நாட்களுக்கு முன் அவன் ஒரு ஊருக்கே நாட்டாண்மைக்காரனாக இருந்தான்! பின் திடீரெனக் குற்றம், தூக்குத் தண்டனை, சிறைவாசம், கற்கோட்டைக்குள் பிரவேசம்! ஒரு ஐந்து நாழிக்குமுன், தூக்குமேடை தவிர எதுவும் அவன் கண்முன் இல்லாதிருந்தது! ஆனால் இப்பொழுதோ! இனி தப்பித்து உயிரைக் காப்பாற்றிக்கொண்டான், இனி எங்கேயாவது சென்று வாழலாம்! மாறுதல்கள் ஒன்றையொன்று அடுத்து திடீரென வந்தன! எவ்வளவு வேகம் எவ்வளவு வேதனை! உம்! ஆனால் எல்லாம் ஒருவகையில் நீங்கியது.

பெருமூச்சு விட்டு, கவலையை நீக்கி, சின்னான் எழுந்தான். சின்னான் அடைகிற மகிழ்ச்சியை உற்றுப் பார்த்துக்கொண்டு எதிரே, சாது நின்றுகொண்டிருந்தார். அவர்தானே கடைசி நேரத்தில் கைகொடுத்துத் தூக்கி உயிரைக் காப்பாற்றினார்! சின்னான் அவரது கையையெடுத்து கண்ணில் ஒற்றிக்கொண்டு, "உங்களுடைய கருணையில்லாவிட்டால், நான் இந்தக் கரையில் அடியெடுத்து வைத்திருக்க முடியாது!" என்று நன்றி தெரிவித்துக்கொண்டான்.

"இல்லை. என் கருணையால் அல்ல! எல்லாம் உன் ராஜாவின் கருணையால் தான்" என்றார் அவர்.

சின்னானுக்கு ஒன்றும் புரியவில்லை. அவனுடைய திகைப்பு எதிரேயிருந்தவரிடம் சிரிப்பையே வரவழைத்தது. அவர் தன்னை மூடியிருந்த துணியை கீழே போட்டார். பயங்கரம் முகத்தில் பிரதிபலிக்க, சின்னான் பயத்தால் பின்வாங்கி நின்றான். அவர் வேறு யாருமில்லை, அவனைத் தண்டித்த அந்த தேசத்து ராஜாதான்!

சின்னான் பின்னால் திரும்பி ஓட முயன்றான். மறைவிலிருந்த வீரர்கள்—கற்கோட்டையிலிருந்த காவல்காரர்களல்ல நால்வர் ஓடிவந்து அவனைப் பிடித்துக்கொண்டனர்.

சின்னானுடைய நிலைகண்டு ராஜா வெடிபடச் சிரித்தார்; கைபால் சுட்டிக்காட்டினார், அங்கே ஒரு மரக்கிளையில் ஒரு முடிபோட்ட கயறு ஊசலாடிக்கொண்டிருந்தது. உண்மையாக ராஜாவின் கருணையால்தான், கதவின் பூட்டுத் திறந்து கிடந்தது, காவற்காரன் உறங்கியது, பாராக்காரர்கள் போகவிட்டது, கோட்டைச் சுவரைத் தாண்டி வந்தது எல்லாம்! தூக்கு மரத்திலிருந்து தப்பித்துக்கொள்ள அவன் ஓடினான், ஆனால் அவன் வந்து சேர்ந்தது, தூக்குமேடைக்குப் பக்கமாக!

ராஜா வேட்டையாடும் பொழுது, உட்கார்ந்திருக்கும் பறவையை விரட்டிப் பறக்கவிட்டு, அவ்வாறு பறந்து ஓடும்பொழுதுதான் குறிவைப்பார்கள்; வலையிலே மான் சிக்கிக்கொண்டாலும், அதை அவிழ்த்துவிட்டு, ஓடும் பொழுதுதான் அம்பை விட்டு, வீழ்த்துவார்கள்! அதைப்போல சிறிது நம்பிக்கையைக் கொடுத்து எல்லாவற்றையும் கேலிக்கூத்தாகும் வகையில் ஒரேயடியாக மட்டந்தட்ட முயலுவார்கள் உல்லாசம் வேண்டி.

சின்னான் அழைத்துச் செல்லப்பட்டான். தூண்டிலிலே சிக்கிய மீனை உடனே எடுத்துப் போடாமல், அது துடிப்பதைக் கண்டு ஆனந்தமடைபவர்போல, அந்த ராஜாவும் நின்றுகொண்டிருந்தார்.

சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7— 8—0
ஆறுமாதம் ,, ,,	3—0—0	3—12—0
தனி இதழ் ,, ,,	0—4—0	0— 5—0

தையற்கலை

[கே. பி. சுந்தரம் G. C. T.]

(சென்ற இதழ் தொடர்ச்சி)

15-ல் இருந்து 7 வரை 9¾ அங்.
($\frac{1}{4}$ மார்பு + $\frac{1}{2}$ அங்.)

15-ல் இருந்து 13 வரை 7½ அங்.
16-ல் இருந்து 13 வரை 3¼ அங்.
(16-க்கும் A-க்கும் நேர்க்கோடு இணைக்க.)

17-ல் இருந்து 13 வரை 7¼ அங்.
18-ல் இருந்து 17 வரை 1 அங்.
19-ல் இருந்து 18 வரை நேர்க்கோடு இணைக்க.)
20-ல் இருந்து 8 வரை ¾ அங்.
21-ல் இருந்து 8 வரை 4½ ,,
22-ல் இருந்து 21 வரை 1 ,,
23-ல் இருந்து 22 வரை 4 ,,
24-ல் இருந்து 23 வரை 1½ ,,
25-ல் இருந்து 24 வரை 2¾ ,,
26-ல் இருந்து 25 வரை 1½ ,,
A-ல் இருந்து 26 வரை 1½ ,,
27-ல் இருந்து 23 வரை 6 ,,
B-ல் இருந்து 27 வரை ½ ,,
28-ல் இருந்து 27 வரை 1½ ,,
28-ல் இருந்து 25 வரை 2¾ ,,
29-ல் இருந்து 16 வரை 3½ ,,
30 ல் இருந்து 19 வரை 1½ ,,



தையற்கலை

இராகம்: குறிஞ்சி] [தாளம்: ஆதி

அழகுக்கு அணி செய்யும் அரிய கலை!
அறிவினால் வளர்ந்திடும் தையற்கலை!
விழிகளைக் கவர்ந்திடும் வசியகலை—இதன்
மேன்மைக்கு உலகினில் ஈடேதுவும் இல்லை(அ)

பழமையில் புதுமையைக் காட்டுங் கலை!
பாவையர்க்கு இன்ப மூட்டுங்கலை!
கிழவரைக் குமரராய்க் காட்டுங்கலை!
கேம்பீரம் தந்திடும் இன்பக்கலை! (அ)

வளருது அனுதினம் நாகரீகம் —அதன்
அளவுகோ லாவதிக் கலையாகும் —இது
வளர்ந்திடத் துணை செய்யும் தமிழ் ஏடு
"மன்றம்" வாழிய! வாழிஇக் கலையோடு! (அ)

—அ. மருதகாசி.

---

12 எண் உள்ள இடத்தில் (பின்பக்கம்) இரண்டு டக்கு (டார்ட்டு) அமைக்கவும். அகலம் 1 அங்குலம். நீளம் 2½ அங்குலம்.

1, 10, 3, 5, 11, 7, 9, 1 எண்கள் வரை பின்பக்கம் இணைப்பவைகள்.

14, 20, 7, 30, 18, 16, 29, 28, 27, B, 14 எண்கள் வரை முன்பக்கம் இணைப்பவைகள்.

முன்பக்கம் (யோக்) துண்டுகளின் விளக்கம்.

22, 20, 7, 30, 18, 16, 29, 24, 23, 22 எண்கள் பெரிய (யோக்) துண்டின் இணைப்புகள்.

23, 24, 29, 28, 27, A, 23 எண்கள் வரை இலைபோன்ற வடிவமுள்ள (யோக்) துண்டின் இணைப்புகள்.

21, 23, 26, 27, B, 14, 21 எண்கள் வரை (ஸ்கொயர்) நான்கு மூலைகளையுடைய (யோக்) துண்டின் இணைப்புகள்.

இந்தத் துண்டுகளை தனித்தனியாக வெட்டியெடுத்து பிறகு சேர்த்துத் தைக்கவேண்டும்.

(யோக்) துண்டுகளுக்கு அதற்கு உள்துணி வைத்து வெட்டவும்.

"மன்றம்" வெளியீடுகள்

இரா. நெடுஞ்செழியன் எழுதியவை :

கண்ணீரும் செந்நீரும்
வளர்த்த கழகம் 0 12 0

மறைந்த திராவிடம் 0 3 0

இரா. செழியன் எழுதியவை :

ராஜாடி ராஜா! (கதைத்தொகுப்பு) 0 12 0

பொது அறிவு (கட்டுரைத் தொகுப்பு) 0 8 0

கிடைக்குமிடம் :

மன்றம் பதிப்பகம்
26, நைனியப்பன் தெரு
மண்ணடி :: சென்னை-1.

"மன்றம்" விற்பனையாளர்கள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் மன்றம் இதழுக்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் தேவை.

சேங்கற்பட்டு
காரைக்கால்
விருதுநகர்
கோவில்பட்டி
சங்கரன்கோவில்
சீர்காழி
அம்பாசமுத்திரம்
ஜோலார்ப்பேட்டை
கோபிச்செட்டிப்பாளையம்
திருவள்ளூர்
ஏரல்
அம்மையப்பன்
கும்பகோணம்

மற்றும் விற்பனையாளர் இல்லாத ஊர்களிலும் விற்பனையாளர் தேவை.

விபரங்களுக்கு :

நிர்வாகி,
'மன்றம்'
26, நைனியப்பன் தெரு, மண்ணடி,
சென்னை-1.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.